# வரலாறு

# பாடத்திட்டம்

## 12, 13 ஆந் தரங்கள்

**(2017 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்)**

சமூக விஞ்ஞானத்துறை
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம
இலங்கை
**www.nie.lk**

## அறிமுகம்

2017 புதிய கலைத்திட்ட மறுசீரமைப்பின் கீழ் கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சைக்குரிய வரலாறு பாடப் பாடத்திட்டம், நான்கு பகுதிகளைக் கொண்டது.

- இலங்கை வரலாறு (பண்டு தொட்டு கி.பி. 1978 வரையில்)
- இந்திய வரலாறு (பண்டு தொட்டு பிரித்தானியர் ஆட்சி முடிவு வரையில்)
- ஐரோப்பிய வரலாறு (கிரேக்க, உரோம நாகரிக காலத் தொடக்கம் கி.பி 1989 வரையில்)
- நவீன உலக வரலாறு (கி.பி. 1500 தொடக்கம் கி.பி. 1989 வரையில்)

இலங்கையின் தற்போதைய நிலையைக் கருதுகையில் பண்டு தொட்டு தனிமையாகவன்றி, பல்வேறு பூகோளத் தாக்கங்களுக்கு உட்பட்டவாறு சுதேசத்துவமடைந்து போசிப்புப் பெற்று வளர்ச்சியடைந்துள்ளமையைக் காண முடிகின்றது. அவ்வாறான போக்குகளையும் அவற்றின் தாக்கங்களையும் இனங்காண்பதற்காக இலங்கை வரலாற்றுடன் இந்திய வரலாறு, ஐரோப்பிய வரலாறு, நவீன உலக வரலாறு ஆகிய பாடவிடயங்களும் க.பொ.த. உயர்தர வரலாற்றுப் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

க.பொ.த. உயர்தர வரலாறு பாடத்தைத் தெரிவு செய்யும் மாணவர்க்குக் கட்டாயமாக இலங்கை வரலாறு எனும் பகுதியைப் பயிற்ற வேண்டும். அத்துடன் இந்திய வரலாறு, ஐரோப்பிய வரலாறு, நவீன உலக வரலாறு ஆகிய மூன்று பகுதிகளுள் ஒன்றைத் தமது விருப்புக்கேற்பத் தெரிவு செய்து கொள்ளலாம்.

2017 இல் நடைமுறைக்கு வரும் இப்பாடத்திட்டத்திற்கமைய கற்றல் கற்பித்தற் செயன்முறையையும் விடய உள்ளடக்கம் தொடர்பான குறிக்கோள்களை அடைதலையும் இலகுபடுத்துவதற்காக கற்றற் பேறுகள் வகுக்கப்பட்டுள்ளன. இலங்கை வரலாற்றைக் கட்டியெழுப்பும் போது அது சார்ந்த பூகோள போக்குகளை இனங்காணப்பட்டதோடு வரலாறு தொடர்பாக அண்மைக் காலத்தில் நடத்தப்பட்ட ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டவிதத்துக்கமைய, விடய உள்ளடக்கத்தில் சிற்சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

**இலங்கை வரலாறு:**

- வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொடர்பாக, முன்னைய பாடத்திட்டத்தின் இருந்ததைவிட கூடதலான அளவு கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது.
- மூலாதார வகைப்பாட்டிற்காக சமகால விதந்துரைப்புக்கள் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளன.
- புதிய பாடத்திட்டத்தில் எமது பண்டைய தொழினுட்பம் எனும் பகுதி சேர்க்கப்பட்டுள்ளது.

**இந்திய வரலாறு:**

- முன்னைய பாடத்திட்டத்தில் கி.பி. 1206 வரையிலேயே கவனஞ் செலுத்தப்பட்டது. புதிய பாடத்திட்டத்தில் இந்திய சுதந்திரம் வரையில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.
- ஒட்டுமொத்த இந்திய வரலாற்றின் அண்டிய இலங்கை மீது செல்வாக்குச் செலுத்திய நிகழ்வுகள் தொடர்பாக கூடுதலான கவனுங் செலுத்தப்பட்டுள்ளது.

**ஐரோப்பிய வரலாறு:**

- பூகோள ரீதியில் செல்வாக்குச் செலுத்திய, பூகோளச் சக்திகள் தொடர்பாக கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது.

**நவீன உலக வரலாறு:**

- உலகில் இடம்பெற்ற பூகோள ரீதியான போக்குகள் குறித்து கூடதலான கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது.

இப்பாடத்திட்டம் 12 ஆம், 13 ஆம் தரங்களக்குரியது. அதற்கமைய அந்தந்த தரத்தில் நடைமுறைப்படுத்துவதற்காக விடய உள்ளடக்கத்தை ஒழுங்குபடுத்திக் கொள்ளல் வேண்டும்.

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | அறிமுகம் | i |
| 2. | உள்ளடக்கம் | iii |
| 3. | தேசிய பொது இலக்குகள் | iv |
| 4. | அடிப்படைத் தேர்ச்சிகள் | v - vi |
| 4. | பாட இலக்குகள் | vii |
| 5. | தேசிய பொது இலக்குகளுக்கும் பாட இலக்குகளுக்குமான தொடர்பு | viii |
| 6. | பாடசாலை தவணைக்கான திட்டம் தயாரித்தல் | ix |
| 7. | பாடத்திட்டம் | 1 - 54 |
| 8. | பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டங்களும் | 55 |
| 9. | கணிப்பீடும் மதிப்பீடும் | 56 |
| 10. | பாடத்திட்டத் தயாரிப்புக் குழு | 57 |

# தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபருக்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்கு தனிநபருக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும், தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கரு திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினை தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

i. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருவுக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.

ii. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.

iii. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும், ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

iv. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்

v. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.

vi. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போசிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

vii. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.

viii. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

(மூலம் : தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை - 2003)

# அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

**(I) தொடர்பாடல் தேர்ச்சிகள்**

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழினுட்பத் தகைமை.

எழுத்தறிவு: கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும், செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையான கருத்துப் பரிமாற்றம்

எண்ணறிவு: பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல்

சித்திர அறிவு: கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல், விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றை கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்

தகவல் தொழினுட்பத் தகைமை: கணினி அறிவு, கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல்.

**(II) ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்**

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டு பிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
- மன எழுச்சிகள், நுண்ணறிவு

**(III) சூழல் தொடர்பான தேர்ச்சிகள்**

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதீகம்

சமூகச் சூழல்: தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறை

உயிரியல் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்பணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

**IV). வேலை உலகத்திற்கு தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்**

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.
பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்
அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்
அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்
பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்

**(V). சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்**

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்

**(VI). ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்**

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவைபோன்ற மனித அனுபவங்கள்

**(VII) "கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்**

விரைவாக மாறுகின்ற, சிக்கலான ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

(மூலம் : தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை - 2003)

# வரலாறு - பாட நோக்கங்கள்

6 ஆம் தரத்திலிருந்து 11 ஆம் தரம் வரை கலைத்திட்டத்தினைக் கற்பதன் மூலம் கீழ்வரும் நோக்கங்களை மாணவர்கள் அடைவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

1. வரலாற்று போக்கு, வளர்ச்சி என்பன பற்றி விளங்கி வரலாறெங்கிலும் இடம்பெற்ற மாற்றங்களைப் புரிந்து கொள்ளல்.
2. கடந்தகாலம் தொடர்பாகப் பயிலுவதன் மூலம் பெறும் விளக்கத்தின் அடிப்படையில் நிகழ்காலத்தைப் புரிந்துகொள்ளலும் எதிர்கால நிலைமைகளைக் கண்டறிதலும்.
3. தேசிய தனித்துவத்தினை இனங்கண்டு, தேசிய அருஞ்செல்வங்களைப் பாதுகாத்து நாட்டுப்பற்றுள்ள பிரசையாக உருவாதல்.
4. தேசிய பிரச்சினைகளை ஒப்பீட்டு ரீதியாக நோக்குதல்.
5. ஏனைய கலாசாரங்களுக்கு மதிப்பளித்தல்.
6. கால ஒழுங்கு, மூலாதார விமர்சனம், காரண காரியத் தொடர்புகள் என்பன மூலம் கட்டி எழுப்பப்படும் பகுத்தறிவு ரீதியான கல்வியறிவை நடைமுறை வாழ்க்கையில் பயன்படுத்துதல்.
7. முக்கிய வரலாற்று மாந்தர்களின் சரிதைகளை முன்மாதிரியாகக் கொள்ளல்.
8. வரலாற்று ரீதியான உலகப் போக்குகள் இந்நாட்டு வரலாற்றில் ஏற்படுத்திய தாக்கங்கள் தொடர்பாக விளங்கி உலகின் போக்குகளை எதிர்கொள்ளும் ஆற்றலைப் பெறல்.
9. காலம், வெளி ஆகியன தொடர்பான அறிவை வளர்த்துக் கொள்ளல்.
10. வரலாற்றுத் தகவல்களின் ஊடாக இடங்களை அறிந்து கொள்ளல்.

## தேசிய பொது இலக்குகளுக்கும் பாட குறிக்கோள்களுக்குமான தொடர்பு

| பாட குறிக்கோள்கள் | தேசிய பொது இலக்குகள் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | i | ii | iii | iv | v | vi | vii | viii |
| 1. வரலாற்று போக்கு, வளர்ச்சி என்பன பற்றி விளங்கி வரலாறெங்கிலும் இடம்பெற்ற மாற்றங்களைப் புரிந்து கொள்ளல். | √ | √ | √ | | | | √ | |
| 2. கடந்தகாலம் தொடர்பாகப் பயிலுவதன் மூலம் பெறும் விளக்கத்தின் அடிப்படையில் நிகழ்காலத்தைப் புரிந்துகொள்ளலும் எதிர்கால நிலைமைகளைக் கண்டறிதலும். | √ | √ | √ | | | √ | √ | |
| 3. தேசிய தனித்துவத்தினை இனங்கண்டு, தேசிய அருஞ்செல்வங்களைப் பாதுகாத்து நாட்டுப்பற்றுள்ள பிரசையாக உருவாதல். | √ | √ | √ | | | | | √ |
| 4. தேசிய பிரச்சினைகளை ஒப்பீட்டு ரீதியாக நோக்குதல். | √ | √ | √ | | | | | |
| 5. ஏனைய கலாசாரங்களுக்கு மதிப்பளித்தல். | √ | √ | √ | | | | | |
| 6. கால ஒழுங்கு, மூலாதார விமர்சனம், காரண காரியத் தொடர்புகள் என்பன மூலம் கட்டி எழுப்பப்படும் பகுத்தறிவு ரீதியான கல்வியறிவை நடைமுறை வாழ்க்கையில் பயன்படுத்துதல். | | | | | √ | | | |
| 7. முக்கிய வரலாற்று மாந்தர்களின் சரிதைகளை முன்மாதிரியாகக் கொள்ளல். | | | | | √ | | | |
| 8. வரலாற்று ரீதியான உலகப் போக்குகள் இந்நாட்டு வரலாற்றில் ஏற்படுத்திய தாக்கங்கள் தொடர்பாக விளங்கி உலகின் போக்குகளை எதிர்கொள்ளும் ஆற்றலைப் பெறல். | √ | √ | √ | | | | √ | |
| 9. காலம், வெளி ஆகியன தொடர்பான அறிவை வளர்த்துக் கொள்ளல். | | √ | | | | | | |
| 10. வரலாற்றுத் தகவல்களின் ஊடாக இடங்களை அறிந்து கொள்ளல். | | √ | | | | | | |

## பாடத்திட்டத்தை பாடசாலைத் தவணைகளுக்கமைய வகுத்துக் கொள்வதற்கான உத்தேச திட்டம்

| தரம் | தவணை | இலங்கை வரலாறு | இந்திய வரலாறு | ஐரோப்பிய வரலாறு | நவீன உலக வரலாறு |
|---|---|---|---|---|---|
| 12 | தவணை 1 | 1.1, 2.1, 3.1, 4.1, 5.1 | 1.1, 2.1, 3.1 | 1.1, 2.1 | 1.1, 2.1 |
| | தவணை 2 | 5.2 | 4.1, 5.1 | 2.2, 3.1, 4.1 | 3.1, 4.1 |
| | தவணை 3 | 6.1 | 5.1, 6.1 | 5.1, 6.1, 7.1 | 5.1, 6.1, 7.1 |
| 13 | தவணை 1 | 7.1, 8.1 | 7.1, 8.1 (முதல் பகுதி இரண்டும்) | 8.1, 9.1, 10.1 | 8.1, 9.1 |
| | தவணை 2 | 9.1, 10.1 | 8.1 (பகுதி இரண்டு), 9.1 | 11.1, 12.1, 13.1 | 10.1 |
| | தவணை 3 | 11.1 | 10.1, 11.1 | 13.2, 14.1 | 11.1, 12.1 |

# பாடத்திட்டம்
# தரம் 12

## க.பொ.த (உயர்தரம்) பாடத்திட்டம்
## இலங்கை வரலாறு (ஆதி காலம் தொடக்கம் 1978 வரை)

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| வரலாற்றுப் பெறுமானத் தொகுதிகள், கால ஒழுங்கு என்பன தொடர்பாகக் கற்றறிந்து, அதன் மூலம் பெறப்படும் வழிகாட்டலை நடைமுறை வாழ்க்கையில் எடுத்துக்காட்டுவார். | 1.1 வரலாறு என்றால் என்ன என்பதைத் தெளிவுபடுத்துவார். | 1. வரலாறு - அறிமுகம்<br>1.1 வரலாறு- வரைவிலக்கணம் | • வரலாறு தொடர்பான வரை விலக்கணங்களைச் சேகரிப்பார்.<br>• வரலாறு எனும் பாடத்துக்கென பொதுவான வரைவிலக்கணம் ஒன்றினைக் கட்டியெழுப்புவார். | 07 |
| | 1.2 வரலாறு கற்பதன் மூலம் பெறப்படும் பயன் களை எடுத்துக்காட்டு வார். | 1.2 வரலாறு கற்பதன் பயன்கள் | • வரலாற்றைக் கற்பதன் மூலம் பெறத்தக்க பயன்களை விபரிப் பார்.<br>• வரலாற்றைக் கற்பதன் பெறுமா னத்தை மதித்து கருத்துரைப் பார். | |
| காலம் அவகாசம் என்பன வற்றை அடிப்படையாகக் கொண்டு நாகரிகம் பரவிய விதம் தொடர்பாக விளக் கத்துடன் செயற்படுவார். | 1.3 வரலாறு கற்பதற்குரிய காலச்சட்டகத்தையும் அவகாசத்தையும் தெளிவுபடுத்துவார். | 1.3 காலப்பகுதி<br>• வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொடக்கம் கி.பி. 1978 வரை | • வரலாற்றுப் பாடத்திற்குரிய கால வேறுபாட்டை எடுத்துக் காட்டுவார்.<br>• கற்றலை இலகுப்படுத்துவதற் காக கால வேறுபாடுகளை வகைப்படுத்திக் காட்டுவார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| நாட்டின் வரலாறு கட்டியெழுப்பப்படுவதில் புவியியற் காரணிகளின் தாக்கத்தினை விளங்கி செயற்படுவார். | 2.1 இலங்கை வரலாற்றில் கற்க வேண்டிய புவியியற் காரணிகள் தொடர்பாக விளக்குவார்.<br><br>2.2 புவியியல் அமைப்பானது இலங்கை வரலாற்றில் செல்வாக்குச் செலுத்திய விதத்தினை நுணுகியாய்வார். | **2. புவியியற் காரணிகள்**<br>• குறைவரள் வலயம்<br>• மத்திய மலைநாடு<br>• கரையோர சமவெளி<br><br>2.2 புவியியல், அமைவிடமும் மனித நடவடிக்கைகளும்<br>– இந்தியாவுக்கு அருகில் அமைந்திருத்தல்<br>– இந்தியாவில் இருந்து பிரிந்திருத்தல்<br>– இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்திருத்தல்<br>• உள்நாட்டு புவியியல் அம்சங்கள், மலைகள், ஆறுகள், சமவெளிகள், துறை முகங்கள் என்பன மனித நடவடிக்கைகளில் ஏற்படுத்தும் செல்வாக்கு<br>• வளங்களின் பரம்பலுக்கும் மானிட செயற்பாடுகளுக்கும் இடையிலான தொடர்பு | • இலங்கை வரலாற்றில் கற்க வேண்டிய காலநிலை வலயங்களை எடுத்துக் காட்டுவார்.<br>• இலங்கை வரலாற்றில் கற்க வேண்டிய பிரதேசங்களைத் தேசப்படத்தில் குறித்துக் காட்டுவார்.<br>• இலங்கையின் அகத்தே உள்ள புவியியல் அமைப்பினையும் புறத்தேயுள்ள புவியியல் அம்சங்களையும் விபரிப்பார்.<br>• புவியின் பௌதீக வேறுபாடு மனித நடவடிக்கைகளில் ஏற்படுத்தும் செல்வாக்கினை எடுத்துக் காட்டுவார்.<br>• இலங்கையின் புவியியல் அமைப்பினை இலங்கைப் படத்தில் குறித்துக் காட்டுவார். | 10 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| மூலாதாரங்களை பகுப்பாய்வுக்கு உட்படுத்துவதன் மூலம் கட்டியெழுப்பப்படும் அறிவை நடைமுறை வாழ்க்கையில் பயன்படுத்துவார். | 3.1 வரலாற்றைக் கட்டியெழுப்புவதற்கு உதவும் மூலாதாரங்கள் தொடர்பாக விசாரணை செய்வார். | 3. மூலாதாரங்கள் - பரிசீலனை செய்தலும் விமர்சித்தலும்<br>3.1 இலங்கையின் வரலாற்றைக் கற்க உதவும் மூலாதாரங்கள்<br>• மூலாதாரண்ஙகளை வகைப்படுத்தல்<br>- இலக்கிய மூலாதாரங்கள்<br>- தொல்பொருள் மூலாதாரங்கள்<br>- கல்வெட்டுக்கள்<br>- நாணயங்கள்<br>- கர்ண பரம்பரைக் கதைகள் | • வரலாற்றைக் கட்டியெழுப்பபங்களிக்கும் மூலாதாரங்களைப் பெயரிடுவார்.<br>• மூலாதாரங்களின் தன்மைக்கு ஏற்ப அவற்றை வகைப்படுத்துவார்.<br>• மூலாதார வகைகளுக்கு ஏற்ப வரலாற்று விடயங்கள் கட்டியெழுப்பத்தக்க விதத்தைத் தெளிவுபடுத்துவார். | 18 |
| | 3.2 மூலாதாரப்பகுப்பாய்வு மூலம் வரலாற்று விடயங்கள் கட்டியெழுப்பப்படும் விதத்தை எடுத்துக்காட்டுவார். | 3.2 மூலாதாரங்களைப் பகுத்தறிவு ரீதியில் விசாரணை செய்தல் | • வரலாற்று மூலாதாரங்களைப் பகுத்தறிவு ரீதியில் நுணுகியாய்வார்.<br>• மூலாதாரங்களைப் பயன்படுத்தும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்களைத் தெளிவுபடுத்துவார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| இலங்கை நாகரிகத்தின் வரலாற்று ரீதியான வளர்ச்சி போக்குகள் தொடர்பாக விளக்கத்துடன் செயற்படுவார். | 4.1 வரலாற்றுக்கு முற்பட்ட காலம் பற்றிய தகவல் களை நுணுகியாய்வார். | 4. குடியேற்றங்களின் ஆரம்பமும் பரம்பலும் (கி.மு. மூன்றாம் நூற்றாண்டின் இறுதி வரை)<br>4.1 வரலாற்றுக்கு முற்பட்ட காலம் | • இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தைத் தெளிவு படுத்துவார்.<br>• பண்டைக் காலம் முதற் கொண்டே இலங்கையில் குடியிருப்புக்கள் இருந்தமையை ஏற்றுக் கொள்வார்.<br>• வரலாற்றுக்கு முற்பட்ட கால குடியிருப்புக்களை இலங்கைப் படத்தில் குறிப்பார். | |
| | 4.2 முன் வரலாற்றுக் கால மானிட செயற்பாடுகள் தொடர்பாகத் தேடிய றிவார். | 4.2 முன் வரலாற்றுக் காலம் | • முன் வரலாற்றுக் காலத்தைத் தெளிவுபடுத்துவார்.<br>• முன் வரலாற்றுக் கால விருத்தியை விளங்கிக் கொள்வார்.<br>• முன் வரலாற்றுக் கால இடங்களை இலங்கைத் தேசப்படத்தில் குறிப்பார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 4.3 வரலாற்றுக்காலம் மற்றும் அதன் குடியிருப்புக்கள் தொடர்பாக நுணுகியாய்வார். | 4.3 வரலாற்றுக் காலம்<br>• இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்து மக்கள் குழுக்களின் வருகை | • வரலாற்றுக் காலத்தைத் தெளிவுபடுத்துவார்.<br>• வரலாற்றுக் காலத்தில் குடியிருப்புக்கள் உருவாகிய விதம் பற்றி விளக்குவார்.<br>• வரலாற்றுக் கால குடியிருப்புக்களை இலங்கைத் தேசப் படத்தில் குறிப்பார். | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| இலங்கை நாகரிகத்தின் வரலாற்று வளர்ச்சி போக்குகள் தொடர்பாக விளக்கத்துடன் செயற் படுவார். | 5.1 இராசரட்டை நாகரிகத் தின் தொழில்நுட்ப அடிப்படையை அறிமுகம் செய்வார். | **5. இராசரட்டை நாகரிகம் (பொலன்னறுவைக்கால இறுதி வரை)**<br>5.1 இராசரட்டை நாகரிகத்தின் அடிப்படை தொடர்பான அறிமுகம் | • இராசரட்டை நாகரிகத்தின் அடிப்படையை விளக்குவார்.<br>• இராசரட்டை நாகரித்தின் விருத்திக்கு அதன் அடிப்படை பங்களிப்புச் செய்த விதத்தை விளக்குவார்.<br>• இராசரட்டை நாகரிகம் தொடர்பான தகவல்களை முன்வைப் பார். | 100 |
| | 5.2 இராசரட்டை நாகரிகத் தின் அரசியல், பொரு ளாதாரம், சமூகம், பண்பாடு, தொழில் நுட்பம் என்பனவற்றை விளக்குவார். | 5.2 இராசரட்டை நாகரிகத்தின் அரசியல், பொருளாதாரம், சமூகம், பண்பாடு, தொழில் நுட்ப நடவடிக்கைகள்<br>• அரசியல்<br>- ஆட்சியாளர்கள்<br>- ஆட்சி முறைகள்<br>- யுத்த உபாயங்கள்<br>- வெளிநாட்டுத் தொடர்புகள்<br>• சமயமும் பண்பாடும்<br>- புத்த சமயம் நிறுவப்படல்<br>- பரவல்<br>- ஏனைய சமயங்கள்<br>- கலை, பண்பாடு<br>• சமுகம் | • இராசரட்டை நாகரிகத்தின் அடிப்படையை வலுப்படுத்து வதற்கு பங்களிப்புச் செய்த அரசர்களை எடுத்துக் காட்டு வார்.<br>• இராசரட்டை நாகரீகத்தின் அபிவிருத்தியை ஏற்றுக் கொள் வார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | • பொருளாதாரம்<br>- விவசாயம்<br>- கைத்தொழில்<br>- வர்த்தகம்<br><br>• விஞ்ஞானமும் தொழில் நுட்பமும்<br>- நீர்ப்பாசனம்<br>- கட்டிடக்கலை<br>- வைத்தியம்<br>- கனிப்பொருட்கள்<br>- கடற்றொழில் | • இராசரட்டை நாகரிகத்தின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள், குளங்கள், அணைகள் என்பனவற்றைப் படமொன்றில் குறிப்பார். | |
| | 5.3 இராசரட்டை நாகரிகத்தின் அடிப்படை பலவீனமடைந்தமையால் வீழ்ச்சியுற்று முடிவடைந்த விதத்தை எடுத்துக் காட்டுவார். | 5.3 இராசரட்டை நாகரிகத்தின் வீழ்ச்சியும் முடிவும் | • இராசரட்டை நாகரிகத்தின் அடிப்படை பலவீனம் அடைந்தமைக்கான காரணங்களை முன்வைப்பார்.<br>• இராசரட்டை நாகரிகம் வீழ்ச்சியடைந்த விதத்தைத் தெளிவுபடுத்துவார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| இலங்கை நாகரிகத்தின் வரலாற்று ரீதியான வளர்ச்சி போக்குகள் என்பன தொடர்பாக விளக்கத்துடன் செயற்படுவார். | 6.1 இலங்கை நாகரிகமானது அதன் ஆரம்ப கால அடிப்படையிலிருந்து மாற்றமடைந்த ஒரு யுகத்தில் பிரவேசித்தலையும், அதன் செயற்பாட்டையும் ஆய்வு செய்வார். | 6. இராசரட்டை நாகரிகத்திற்குப் பிற்பட்ட காலம்<br>6.1 ஆட்சி மையங்கள்<br>- அறிமுகம்<br>- தம்பதெனிய, யாப்பகுவ, குருணாகலை, கம்பளை<br>- வெளிநாட்டுத் தொடர்புகள்<br>- சமயம், பண்பாடு, சமூகம் | • பொலன்னறுவைக் காலத்தின் பின்னர் தோற்றம் பெற்ற இராசதானிகளை அறிமுகம் செய்வார்.<br>• இராசரட்டை இராசதானிகளுக்கும் பொலன்னறுவைக் காலத்தின் பின்னர் தோற்றம் பெற்ற இராசதானிகளுக்குமிடையிலான வேறுபாடுகளைத் தெளிவுபடுத்துவார்.<br>• பொலன்னறுவைக் காலத்தின் பின்னர் தோற்றம் பெற்ற இராசதானிகளை இலங்கைப் படத்தில் குறித்துக் காட்டுவார். | 50 |
| | 6.2 யாழ்ப்பாண இராசதானி தொடர்பாக நுணுகியாய்வார். | 6.2 யாழ்ப்பாண இராசதானி | • யாழ்ப்பாண இராசதானியின் ஆரம்பம், வளர்ச்சி என்பனவற்றை விபரிப்பார்.<br>• யாழ்ப்பாண இராசதானியின் வீழ்ச்சியை விபரிப்பார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 6.3 கோட்டை இராசதானி தொடர்பாக நுணுகியாய்வார். | 6.3 கோட்டை இராசதானி | • கோட்டை இராசதானியின் ஆரம்பம், வளர்ச்சி என்பன தொடர்பாகத் தெளிவுபடுத்துவார்.<br>• கோட்டை இராசதானியின் சிறந்த அரசர்களை உயர்வாக மதிப்பார்.<br>• கோட்டை இராசதானியின் வீழ்ச்சியை விபரிப்பார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| கால ஒழுங்குமுறை, மூலாதாரங்கள் அதன் பயன்கள் என்பவற்றை அணுகி கட்டியெழுப்பப் படும் ஆய்வு ரீதியான அறிவினை தம் வாழ்க்கையில் படிப்பினையாகக் கொள்வர். | 1.1 இந்திய வரலாற்றைக் கற்பதற்கான மூலாதாரங்களை விமர்சிப்பர். | 1. **மூலாதாரங்களை ஆய்வு செய்தலும் விமர்சித்தலும்**<br>• இந்திய வரலாற்றை கற்பதற்கான மூலாதாரங்கள்<br>• மூலாதாரங்களை வகைப் படுத்தல்<br>• மூலாதாரங்களைப் பயன்படுத்துவதில் உள்ள சவால்கள்<br>• மூலாதாரங்கள் தொடர்பான விமர்சனங்கள்<br>• மூலாதாரங்களை ஒப்பிட்டு ஆய்வு செய்வதன் முக்கியத்துவம் | • இந்திய வரலாற்றைக் கற்பதற்குள்ள மூலாதாரங்களைப் பெயரிடுவர்.<br>• இந்திய வரலாற்றைக் கற்பதற்குள்ள மூலாதாரங்களை வகைப்படுத்துவர்.<br>• இந்திய வரலாற்றைக் கட்டியெழுப்பும் போது மூலாதாரங்களைப் பயன்படுத்த வேண்டிய முறையைத் தெளிவுபடுத்துவர். | 08 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| ஒரு நாட்டின் வரலாறு கட்டியெழுப்பப்படும்போது பௌதிகக் காரணிகள் செல்வாக்குச் செலுத்தும் விதம் பற்றி புரிந்துணர்வுடன் செயற்படுவர். | 2.1 புவியியல் அமைவிடம் இந்திய வரலாறு தொடர்பில் செல்வாக்கு செலுத்தியுள்ள விதத்தை ஆய்வு செய்வர். | 2. **புவியியற் காரணிகள் இந்திய வரலாற்றில் செல்வாக்குச் செலுத்தியுள்ள விதம்**<br>• புவியியல் அமைவிடம்<br>- வெளிப்புற அமைவு<br>- உள்ளக அமைவு<br>• புவியியல் காரணிகள் இந்திய வரலாற்றில் செல்வாக்குச் செலுத்துதல்<br>• இந்தியாவின் விசாலமும் இனப் பல்வகைமையும் | • இந்தியாவின் புற அமைவு மற்றும் உள்ளக அமைவை விபரிப்பர்.<br>• இந்தியாவின் அமைவிடம் உள்நாட்டு வெளிநாட்டு மனித தொடர்புகள் சம்பந்தமாக செல்வாக்குச் செலுத்தியுள்ளதை இனங்காட்டுவார்.<br>• இந்தியாவின் பௌதிக அம்சங்களை இந்திய புறவுருவப் படத்தில் குறித்துக் காட்டுவர். | 15 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| இந்திய வரலாற்றின் வரலாற்று ரீதியான வளர்ச்சி மற்றும் போக்குகள் தொடர்பான விளக்கத்துடன் செயற்படுவார். | 3.1 சிந்துநதி நாகரிகத்தின் ஆரம்பம், வளர்ச்சி, வீழ்ச்சி என்பன தொடர்பாகத் தகவல்களை நுணுகியாய்வார். | **3. சிந்து நதியை மையமாகக் கொண்டு தோற்றம் பெற்ற நகர நாகரிகம்**<br>• ஹரப்பா நாகரிகத்தை அறிமுகம் செய்தல்<br>• ஆரம்பம், விரிவாக்கம் தொடர்பான கருத்துக்களும் சமகால நாகரிகங்களுக்கிடையிலான தொடர்புகளும்<br>• நகரத்திட்டமிடல்<br>• சமூக, பொருளாதார, சமய நிலை<br>• கலைத்திறன்கள்<br>• வீழ்ச்சியும் அது தொடர்பாக ஆய்வாளர்களின் கருத்தும் | • ஹரப்பா நாகரிகம் தொடர்பான தகவல்களை விபரிப்பார்.<br>• ஹரப்பா நாகரித்தின் சிறப்பினை மதிப்பார்.<br>• ஹரப்பா நாகரிகம் சிறப்புற்று விளங்கிய இடத்தினை தேசப்படத்தில் அடையாளமிடுவார். | 30 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| இந்திய வரலாற்று விரிவாக்கம், வளர்ச்சி என்பன தொடர்பாக விளக்கத்துடன் செயற்படுவார். | 4.1 வேத காலம் தொடர்பான தகவல்களை விபரிப்பார். | **4. கங்கைச் சமவெளி வழியே பரவிய மானிட குடியிருப்பு**<br>• இறுக்கு வேத இலக்கியத்தின் மூலம் வெளிப்படும் மானிட குடியிருப்பு விரிவாக்கத்தின் நிலை<br>• இறுக்கு வேத காலத்தின் அரசியல், சமுக, பொருளாதார, பண்பாட்டுக் கோலங்கள்<br>• பிந்திய வேத கால குடியிருப்பு விரிவாக்கம்<br>• பிந்திய வேத காலத்தின் அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டு வளர்ச்சி | • வேத காலம் தொடர்பான தகவல்களை முன்வைப்பார்.<br>• வேத காலமே இந்திய நாகரிகத்தின் அடிப்படை என்பதற்கான தகவல்களை முன்வைப்பார்.<br>• இறுக்கு வேத காலம், பிந்திய வேத காலம் ஆகியவற்றில் குடியிருப்புக்களின் விரிவாக்கத்தைத் தேசப்படத்தில் குறிப்பார். | 30 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| இந்திய வரலாற்றின் விரிவாக்கம், வளர்ச்சி என்பன தொடர்பாக விளக்கத்துடன் செயற்படுவார். | 5.1 பதினாறு பெருங்குடியேற்றங்களின் விரிவாக்கம் தொடர்பாக விபரிப்பார். | **5. அரசியல், மானிட சிந்தனைகளின் வளர்ச்சி**<br>5.1 குடியேற்றப் பரம்பலும் பதினாறு பெருங்குடியேற்றங்களும் | • பதினாறு பெருங்குடியேற்றங்களை விபரிப்பார்.<br>• பதினாறு பெருங்குடியேற்றங்களில் பலம் பொருந்திய அரசுகளை எடுத்துக் காட்டுவார்.<br>• பதினாறு பெருங்குடியேற்றங்களைத் தேசப்படமொன்றில் குறிப்பார். | 30 |
| | 5.2 சமய, மெய்யியல் கருத்துக்கள் இந்திய நாகரிகத்தைக் கட்டியெழுப்புவதில் பங்களிப்புச் செய்துள்ள விதத்தினை நுணுகியாய்வார். | 5.2 சமய சிந்தனைகளின் வளர்ச்சி<br>• பண்பாட்டு வேறுபாடுகளும் புதிய சமய சிந்தனைகள் தோற்றம் பெறலும் பரவலடைதலும்<br>• அரசியல் சிந்தனைகள் மற்றும் புதிய சமய சிந்தனைகளின் தாக்கம் காரணமாக மாற்றமடையும் மானிட நடத்தைகளும் செயற்பாடுகளும் | • இந்தியாவில் வளர்ச்சியடைந்த புதிய சமய சிந்தனைகளை விபரிப்பார்.<br>• புதிய சமய சிந்தனைகள் அரசியலில் ஏற்படுத்திய தாக்கத்தினை எடுத்துக்காட்டுவார்.<br>• புதிய சமய சிந்தனைகள் மனித சமுதாயத்தில் தாக்கம் விளைவித்த விதத்தை விபரிப்பார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| இந்திய வரலாற்று விரிவாக்கம், வளர்ச்சி என்பன தொடர்பாக விளக்கத்துடன் செயற்படுவார். | 6.1 பேரரசு என்ற எண்ணக் கருவை மௌரியப் பேரரசை அடிப்படையாகக் கொண்டு தெளிவுபடுத்துவார். | **6. பேரரசு எண்ணக்கருவும் மௌரியப் பேரசும்**<br>• ஆட்சி எண்ணக்கருக்களின் வளர்ச்சியும் பேரரசு எண்ணக்கருவும்<br>• மௌரியப் பேரரசின் வளர்ச்சி<br>• மௌரியப் பேரரசின் ஆட்சியாளனான அசோகனும் அவனது கொள்கைகளும்<br>• மௌரியப் பேரரசின் கீழ் அரசியல் பொருளாதார, சமூக, பண்பாட்டுப்போக்குகள்<br>• மௌரியப் பேரரசின் வீழச்சியும் காரணங்களும் | • பேரசு எண்ணக்கருவை விபரிப்பார்.<br>• பலம் வாய்ந்த மௌரியப் பேரரசு கட்டியெழுப்பப்பட்ட விதத்தினைத் தெளிவுபடுத்துவார்.<br>• பேரரசு ஒன்றின் சிறப்பியல்புகளை மௌரிய ஆட்சியின் அடிப்படையில் விபரிப்பார்.<br>• மௌரியப் பேரரசின் வீழ்ச்சிக்கான காரணங்களை முன்வைப்பார்.<br>• மௌரியப் பேரரசின் பரவலைத் தேசப்படத்தில் குறித்துக் காட்டுவார். | 25 |

## ஐரோப்பிய வரலாறு
## (கி.பி. 1500 - 1989)

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| **பல்வேறு செல்வாக்குகளை முன்வைத்து நாகரிகங்கள் கட்டியெழுப்பப்படும் முறை பற்றித் தெளிவுபடுத்துவார்.** | 1.1 நவீன ஐரோப்பா தோற்றம் பெற்ற விதத்தினைத் தெளிவுபடுத்துவார். | 1. **ஐரோப்பிய நாகரிகத்தின் அடித்தளம்**<br>• கிரேக்க, உரோம, கிறிஸ்தவ நாகரீக ஆரம்பம்<br>• இஸ்லாம் பரவல்<br>• மானிய முறையின் வீழ்ச்சி<br>• சிலுவை யுத்தம்<br>• வர்த்தக முன்னேற்றம்<br>• நகரங்களின் வளர்ச்சி<br>• மத்திய வகுப்பினரின் எழுச்சி | • ஐரோப்பிய நாகரிகத்தின் அடிப்படையை விளக்குவார்.<br>• நவீன ஐரோப்பிய நாகரீக வளர்ச்சியில் கிரேக்க, உரோம, கிறிஸ்தவ நாகரிகங்கள் தாக்கம் செலுத்தியுள்ள விதத்தினை எடுத்துக்காட்டுவார்.<br>• மானிய முறையின் வீழ்ச்சி, நவீன ஐரோப்பாவின் தோற்றம் ஆகியவற்றிற்கு வழிவகுத்த காரணிகளைத் தெளிவுபடுத்துவார்.<br>• கிரேக்க, உரோம, கிறிஸ்தவ, இஸ்லாமிய நாகரிகப் பரம்பலைத் தேசப்படத்தில் குறித்துக் காட்டுவார். | 30 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| **ஐரோப்பாவில் ஏற்பட்ட மாற்றங்கள் உலகில் ஏற்படுத்திய தாக்கத்தினை எடுத்துக்காட்டுவார்.** | 2.1 ஐரோப்பா நவீன உலகத்திற்கு மாற்றம் அடைந்தமை தொடர்பாக விளக்குவார்.<br><br>2.2 ஐரோப்பிய நாடுகள் ஏனைய கண்டங்களில் பேரரசைக் கட்டியெழுப்பிய விதத்தைப் பரீட்சிப்பார். | **2. நவீன ஐரோப்பாவின் ஆரம்பம்**<br>மறுமலர்ச்சியும் அறிவு வளர்ச்சியும்<br>• விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள்<br>• தேசிய அரசுகளின் எழுச்சி<br><br>நாடுகாண் பயணங்கள்<br>• ஐரோப்பிய விஸ்தரிப்பு | • மறுமலர்ச்சி பற்றி விளக்குவார்.<br>• புதிய போக்கு ஐரோப்பாவை நவீன யுகத்திற்குக் கொண்ட சென்ற விதத்தை எடுத்துக் காட்டுவார்.<br>• நாடுகாண் பயணங்களைத் விபரிப்பார்.<br>• ஐரோப்பாவின் நாடுகாண் பயணங்கள் ஏனைய நாடுகளில் ஏற்படுத்திய தாக்கத்தினை விமர்சிப்பார்.<br>• நாடுகாண் பயணங்களையும் ஐரோப்பாவின் விஸ்தரிப்பையும் உலகப்படத்தில் குறித்துக் காட்டுவார். | 25 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| சமயத்துறையில் ஏற்படும் மாற்றம் சமூகத்தில் ஏனைய துறைகளில் ஏற்படுத்தும் தாக்கத்தினை அடையாளங் கண்டு மாற்றத்திற்கு முகங் கொடுக்கும் மனநிலையை வளர்த்துக் கொள்வார். | 3.1 ஐரோப்பாவில் மதச் சீர்த்திருத்தம் ஏற்படுவதற்கான காரணங்களை விளக்குவார்.<br><br>3.2 புரட்டஸ்தாந்து மதச் சீர்த்திருத்தம், எதிர் மதச் சீர்த்திருத்தம் என்பவற்றின் விளைவுகளை ஆராய்வார்.<br><br>3.3 சமயத்தை முன்னிட்டு ஐரோப்பாவில் ஏற்பட்ட மோதல்களை ஆய்வு செய்வார். | 3. சமய சீர்திருத்தமும் எதிர் சமய சீர்திருத்தமும்<br>3.1 சமய சீர்திருத்தத்தின் பின்னணி<br>3.2<br>• புரட்டஸ்தாந்து சமய சீர்திருத்தம்<br>• எதிர் மதச் சீர்திருத்தம்<br>3.3 முப்பதாண்டுப் போர்<br>• போரின் முக்கிய கட்டங்கள்<br>• வெஸ்ட்பாலியா உடன்படிக்கை | • சமய சீர்திருத்தத்தின் பின்னணியை விளக்குவார்.<br>• சமய சீர்திருத்தத்தின் விளைவுகளை எடுத்துக் காட்டுவார்.<br>• சமய சீர்திருத்தத்துடன் தொடர்புடைய நாடுகளைத் தேசப்படம் ஒன்றில் குறிப்பார்.<br>• சமய சீர்திருத்தம் பற்றித் தெளிவுபடுத்துவார்.<br>• உரோமன் கத்தோலிக்க புரட்டஸ்தாந்து சமயங்களின் பரவலை ஐரோப்பா படத்தில் குறித்துக் காட்டுவார்.<br>• எதிர்மதச் சீர்திருத்தத்தின் விளைவுகளை விமர்சிப்பார்.<br>• முப்பது ஆண்டுப்போரைத் தெளிவு படுத்துவார்.<br>• முப்பது ஆண்டுப் போரின் விளைவுகளை எடுத்துக் காட்டுவார்.<br>• முப்பது ஆண்டுப் போரின் இறுதியில் காணப்பட்ட ஐரோப்பாவினைத் தேசப்படம் ஒன்றில் அடையாளமிடுவார். | 25 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| பாராளுமன்றத்தின் அதிகாரத்தை அதிகரிப்பது மனித இனத்தின் முன்னேற்றத்திற்கு வழிவகுத்த விதத்தை விளக்குவார். | 4.1 பிரித்தானிய பொருளாதார சமூக நிலைகளில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு இசைவாக அரசியல் துறையில் ஏற்பட்ட முன்னேற்றத்தை நுணுகியாய்வார்.<br><br>4.2 பிரித்தானிய பாராளுமன்றத்தை அடிப்படையாகக் கொண்டு பாராளுமன்ற ஆட்சி முறையின் பிரதான இயல்புகளை விமர்சிப்பார். | **4. பிரித்தானியப் பாராளுமன்ற முறை**<br>4.1 பாராளுமன்றத்தின் ஆரம்பமும் வளர்ச்சியும்<br>4.2 பாராளுமன்ற முறையின் இயல்புகள் | • பிரித்தானியாவில் பொருளாதார சமுக துறைகளில் ஏற்பட்ட மாற்றங்களை விளக்குவார்.<br>• பொருளாதார, சமூகத் துறைகளில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு இசைவாக அரசியல் துறையில் ஏற்பட்ட முன்னேற்றத்தை எடுத்துக் காட்டுவார்.<br>• பிரித்தானியப் பாராளுமன்ற முறையின் ஜனநாயக பண்புகளை விபரிப்பார். | 15 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| இயற்கையின் சவால்களுக்கு முகங் கொடுப்பதில் மனிதன் பெற்ற வெற்றியைத் தெளிவாக விளங்கிக் கொண்டு அதன்படி செயற்படுவார். | 5.1 உலகின் போக்கினை மாற்றி அமைப்பதில் கைத்தொழில் புரட்சி ஏற்படுத்திய தாக்கம் தொடர்பான தகவல்களை சேகரிப்பார். | 5. கைத்தொழில் புரட்சி<br>• ஆரம்பம்<br>• பரவல்<br>• விளைவு | • கைத்தொழில் புரட்சி ஏற்படுவதற்கான பின்னணியையும் புதிய கண்டுபிடிப்புக்களையும் விமர்ச்சிப்பார்.<br>• கைத்தொழில் புரட்சியின் விளைவுகளை எடுத்துக் கூறுவார்.<br>• கைத்தொழில் புரட்சியின் பரவலைத் தேசப்படம் ஒன்றில் குறித்துக் காட்டுவார். | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| ஒரு நாட்டு மக்கள் ஒற்றுமையுடன் செயற்படு வதன் மூலம் வெற்றி பெற முடியும் என்ற புரிந்துணர் வுடன் செயற்படுவர். | 6.1 அமெரிக்கக் கண்டத்தில் ஐரோப்பிய நாகரிகம் பரவிய விதத்தைப் பரீட்சிப்பார். | **6. அமெரிக்க சுதந்திரப் போர்**<br>6.1 குடியேற்றங்கள் தோற்றம் பெறல்<br>• அமெரிக்காவின் ஆரம்ப குடியேற்ற வாசிகள்<br>• ஐரோப்பியர் அமெரிக்காவிற்கு சென்று குடியேற்றங்கள் அமைத்தமை<br>• வட அமெரிக்காவில் ஆங்கிலக் குடியேற்றங்கள் | • அமெரிக்காவின் ஆரம்ப குடியேற்றவாசிகள் தொடர்பான தகவல்களைத் தேடியறிவார்.<br>• பிரித்தானியர் அமெரிக்காவில் அமைத்த குடியேற்றங்கள் பற்றி தகவல்களை விளக்குவார்.<br>• வட அமெரிக்காவில் காணப்பட்ட பிரித்தானிய குடியேற்றங்களைத் தேசப்படம் ஒன்றில் குறித்துக் காட்டுவார். | 20 |
| | 6.2 அமெரிக்க சுதந்திரப் போர் உலக வரலாற்றில் முக்கியத்துவம் பெறும் விதத்தினை விளக்குவார். | 6.2 சுதந்திரப் போர்<br>• சுதந்திரப் போருக்கான காரணங்கள்<br>• சுதந்திரப் போரின் முக்கிய கட்டங்கள்<br>• குடியேற்றவாசிகளின் வெற்றிக்கான காரணங்கள்<br>• சுதந்திரப் போரின் விளைவுகள் | • அமெரிக்க சுதந்திரப் போரை விளக்குவார்.<br>• அமெரிக்க சுதந்திரப் போர் உலக வரலாற்றில் முக்கியத்துவம் பெறும் விதத்தினைத் தெளிவுபடுத்துவார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| சுதந்திரம் மற்றும் மனித உரிமைகள் என்பன மக்கள் புரட்சியின் விளைவு என்பதை புரிந்துணர்ந்து அவற்றைப் பாதுகாக்கும் வகையில் செயற்படுவார். | 7.1 சமூகத்தில் ஏற்படும் பிரச்சினையான சந்தர்ப்பங்களைப் புறக் கணிப்பதால் புரட்சி ஒன்று ஏற்படலாம் என்பதை பிரான்சிய புரட்சியை அடிப்படையாகக் கொண்டு விளக்குவார். | **7. பிரான்சியப் புரட்சி**<br>• பிரான்ஸின் ஆரம்ப ஆட்சி முறை<br>• பிரான்ஸிய புரட்சிக்கான காரணங்கள்<br>• புரட்சியின் ஆரம்பமும் வளர்ச்சியும்<br>• புரட்சியின் பிரதான கட்டங்கள்<br>• புரட்சியின் விளைவுகள் | • பிரான்சியப் புரட்சிக்கான காரணங்களை விளக்குவார்.<br>• பிரான்சியப் புரட்சியின் பிரதான கட்டங்களை விளக்குவார்.<br>• பிரான்சியப் புரட்சியின் விளைவுகளை விபரிப்பார். | 25 |

## க.பொ.த (உயர்தரம்) பாடத்திட்டம்
## நவீன உலக வரலாறு (கி.பி. 1500 ஆம் ஆண்டு தொடக்கம் - 1989 வரை)

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| நவீன உலகின் தோற்றத்தில் தாக்கத்தினை ஏற்படுத்திய வரலாற்று சக்திகள் தொடர்பான விளக்கத்துடன் செயற்படுவார். | 1.1 வணிக முதலாளித்துவ முறையின் எழுச்சியானது நவீன உலகின் எழுச்சிக்கு வழிவகுத்த முறையினைப் பகுத்தாய்வார். | **1. நவீன உகின் தோற்றம்**<br>1.1 மானிய முறையின் வீழ்ச்சியும் வணிக முதலாளித்துவத்தின் எழுச்சியும் | • வணிக முதலாளித்துவத்தைப் பகுத்தாய்வார்.<br>• ஐரோப்பாவில் முதலாளித்துவத்தின் எழுச்சியை விபரிப்பார்.<br>• வணிக முதலாளித்துவத்தின் எழுச்சியானது நவீன உலகின் தோற்றத்தில் தாக்கம் செலுத்திய விதத்தினை எடுத்துக் காட்டுவார். | 35 |
| | 1.2 தேசிய அரசுகளின் எழுச்சி நவீன உலகின் தோற்றத்தில் தாக்கத்தினை ஏற்படுத்திய விதத்தினைப் பகுத்தாய்வார். | 1.2 தேசிய அரசுகள் தோற்றம் பெற்றமை | • தேசிய அரசுகள் தோற்றம் பெற்றமைக்கான காரணங்களைத் தெளிவுபடுத்துவார்.<br>• ஐரோப்பாவில் தோன்றிய தேசிய அரசுகள் பற்றி விபரிப்பார்.<br>• ஐரோப்பாவில் தோன்றிய தேசிய அரசுகளைத் தேசப் படத்தில் குறித்துக் காட்டுவார்.<br>• தேசிய அரசுகளின் தோற்றமானது, நவீன உலகின் தோற்றத்தில் தாக்கம் செலுத்தும் விதத்தினை எடுத்துக்காட்டுவார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 1.3 தனிமைப்படுத்தப்பட்டிருந்த நாடுகள் உலகுடன் தொடர்பு பட்ட முறையினை எடுத்துக் காட்டுவார். | 1.3 நாடுகாண் பயணங்கள்<br>• 16 ஆம் நூற்றாண்டில் ஆசியா, ஆபிரிக்கா, அமெரிக்கா ஆகிய கண்டங்களின் நிலைமை<br>• ஐரோப்பாவில் நாடுகாண் பயணங்கள் | • ஐரோப்பாவின் நாடுகாண் பயணங்களுக்கு முன்னர் ஆசியா, ஆபிரிக்கா, அமெரிக்கக் கண்டங்களில் காணப்பட்ட நிலைமையைத் தெளிவுபடுத்துவார்.<br>• ஐரோப்பாவில் நாடுகாண் பயணங்கள் ஆரம்பமாகியமைக்கான காரணங்களைத் தெளிவுபடுத்துவார்.<br>• நாடுகாண் இயக்கத்தையும் அதன் விளைவுகளையும் எடுத்துக்காட்டுவார்.<br>• நாடுகாண் பயணங்களைத் தேசப்படத்தில் குறித்துக்காட்டுவார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| நவீன உலகின் தோற்றத்தில் தாக்கத்தினை ஏற்படுத்திய வரலாற்றுச் சக்திகள் தொடர்பான விளக்கத்துடன் செயற்படுவார். | 2.1 ஐரோப்பாவின் வலிமை மிக்க அரசுகள் உலகம் முழுவதும் தமது அதிகாரத்தைப் பரவச் செய்த விதத்தைப் பகுத்தாய்வார். | **2. ஐரோப்பாவின் அதிகாரப் பரவலும் பேரரசுகள் கட்டியெழுப்பப்படுதலும்**<br>• வட, தென் அமெரிக்கா<br>• ஆசியா<br>• ஆபிரிக்கா | • ஐரோப்பிய நாடுகள் ஏனைய கண்டங்கள் மீது தமது கவனத்தை செலுத்தியமைக்கான காரணங்களைத் தெளிவுபடுத்துவார்.<br>• ஐரோப்பிய நாடுகள் உலகின் ஏனைய நாடுகளில் தமது அதிகாரத்தைப் பரப்பிய விதத்தினை எடுத்துக்காட்டுவார்.<br>• ஐரோப்பிய நாடுகளின் அதிகாரப் பரவலுடன் உலகில் ஏற்பட்ட மாற்றங்களைத் தெளிவுபடுத்துவார்.<br>• ஐரோப்பியரின் அதிகாரப் பரவலை தேசப்படம் ஒன்றில் குறித்துக்காட்டுவார். | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| நவீன உலகின் தோற்றத்தில் தாக்கம் செலுத்திய வரலாற்றுச் சக்திகள் தொடர்பான விளக்கத்துடன் செயற்படுவார். | 3.1 பாராளுமன்றத்தின் அதிகாரத்தைக் கட்டியெழுப்புவதில் ஆங்கிலப் புரட்சியின் பங்கினைப் பரீட்சிப்பார். | **3. நவீன உலகினை உருவாக்கிய புரட்சிகள்**<br>3.1 கி.பி. 1688 ஆங்கிலப் புரட்சி | • ஆங்கிலப் புரட்சிக்கான காரணங்களை விளக்குவார்.<br>• ஆங்கிலப் புரட்சியின் தொடக்கத்தினையும் வளர்ச்சியையும் விபரிப்பார்.<br>• நவீன உலகை உருவாக்குவதில் ஆங்கிலப் புரட்சியின் பங்களிப்பை எடுத்துக் காட்டுவார். | 10 |
| | 3.2 அமெரிக்க சுதந்திரப் போராட்டம் ஓர் உலக சக்தியாக அமைந்த விதத்தினைப் பகுத்தாய்வார். | 3.2 அமெரிக்க சுதந்திரப் போராட்டம் | • அமெரிக்க சுதந்திரப் போராட்டத்தை விபரிப்பார்.<br>• அமெரிக்காவில் பிரித்தானியரது குடியேற்றங்களைப் படமொன்றில் குறித்துக்காட்டுவார்.<br>• அமெரிக்க சுதந்திரப்போராட்டம் உலக வரலாற்றின் மீது செலுத்திய தாக்கத்தினை விபரிப்பார். | |
| | 3.3 மனித உரிமைகளைக் காப்பதின் முக்கியத்துவத்தினை எடுத்துக் காட்டிய பிரான்சிய புரட்சியைப் பகுத்தாய்வார். | 3.3 பிரான்சியப் புரட்சி | • பிரான்சியப் புரட்சி ஏற்படுவதற்கு ஏதுவான காரணங்களை பகுத்தாய்வார்.<br>• பிரான்சியப் புரட்சியின் மூலம் வென்றெடுத்த அடிப்படை மனித உரிமைகளை எடுத்துக் காட்டுவார்.<br>• மனித உரிமைகளைப் பாதுகாத்தலானது முழு நவீன உலகமும் ஏற்றுக் கொண்டுள்ள ஓர் எண்ணக்கரு என்பதைத் தெளிவுபடுத்துவார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| நவீன உலகின் தோற்றத்தில் தாக்கத்தினை ஏற்படுத்திய வரலாற்றுச் சக்திகள் தொடர்பான விளக்கத்துடன் செயற்படுவார். | 4.1 சவால்களை எதிர்நோக்கும்போது ஆக்கவியல் சிந்தனை வளர்ச்சியடையும் விதத்தினை எடுத்துக் காட்டுவார். | **4. கைத்தொழில் புரட்சியில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள்**<br>• கைத்தொழில் புரட்சி<br>• தொழில்நுட்ப வளர்ச்சி<br>• பரவல்<br>• விளைவுகள் | • கைத்தொழில் புரட்சியை அறிமுகம் செய்வார்.<br>• தேவைக்கு ஏற்ப உற்பத்தி செய்யப்பட்ட புதிய உற்பத்தி தொடர்பாக விபரிப்பார்.<br>• கைத்தொழில் புரட்சி புதிய உலகின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த விதத்தினைத் தெளிவுபடுத்துவார்.<br>• கைத்தொழில் புரட்சியின் பரவலைத் தேசப்படத்தில் குறித்துக் காட்டுவார். | 25 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| நவீன உலகின் பல்வேறு அரசியல் கருத்துக்கள் நடைமுறையில் செயற்பாடாக மாற்றமடைந்த விதத்தினைப் பரீட்சிப்பார். | 5.1 லிபரல்வாதம், தேசிய வாதம் என்பன நடைமுறையில் செயற்படும் முறையினைத் தெளிவு படுத்துவார். | **5. லிபரல் வாதத்தினதும் தேசிய வாதத்தினதும் எழுச்சி**<br>• லிபரல் வாதத்தினதும் தேசிய வாதத்தினதும் வளர்ச்சி<br>• 1848 ஆம் ஆண்டு புரட்சி<br>• அணிகள்<br>• இத்தாலி ஐக்கியப்படுதல்<br>• ஜேர்மனி ஐக்கியப்படுதல் | • அரசியல் சிந்தனையின் வளர்ச்சியுடன் புரட்சி அணிகள் எழுச்சி பெற்ற விதத்தினை விபரிப்பார்.<br>• லிபரல் வாதமும் தேசிய வாதமும் நடைமுறையில் செயற்பட்ட விதத்தினை எடுத்துக் காட்டுவார்.<br>• ஜேர்மனி ஐக்கியப்பட்ட விதத்தை வரைபடத்தில் குறித்துக் காட்டுவார்.<br>• இத்தாலி ஐக்கியப்பட்ட விதத்தை வரைபடம் ஒன்றில் குறித்துக் காட்டுவார். | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| அதிகாரம் தொடர்பாக ஏற்படும் முரண்பாடுகள் அழிவினை ஏற்படுத்தும் என்பதனை விளங்கிக் கொண்டு சமாதானத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பார். | 6.1 முதலாம் உலக யுத்தத்தின் அழிவுகளை எடுத்துக் காட்டுவார். | **6. முதலாம் உலக யுத்தம்**<br>- யுத்தம் ஏற்படுவதில் தாக்கம் விளைவித்த வரலாற்றுப் பின்னணி<br>• புதிய பேரரசுக் கொள்கை<br>• ஆபிரிக்கா தொடர்பான போட்டி<br>• போல்கன் பிரச்சினை<br>• ஐரோப்பா இரு அணிகளாகப் பிரிந்தமை<br>• யுத்தத்தின் முக்கிய கட்டங்கள்<br>• யுத்தத்தின் விளைவுகள்<br>• வேர்சேல்ஸ் உடன்படிக்கை<br>• ஐரோப்பிய தேசப்படம் மாற்றமடைதல்<br>• சர்வதேச மன்றம் ஏற்படுத்தப்பட்டமை | • உலக யுத்தம் நடைபெற்ற விதத்தினைத் தெளிவுபடுத்துவார்.<br>• உலக யுத்தத்தின் விளைவுகளை எடுத்துக்காட்டுவார்.<br>• உலக யுத்தத்துடன் தொடர்புடைய இடங்கள், நாடுகள் என்பவற்றைத் தேசப்படத்தில் குறித்துக் காட்டுவார். | 15 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| நவீன உலகில் பல்வேறு அரசியல் சிந்தனைகள் செயற்பாட்டு ரீதியில் நடைமுறையில் மாற்றத்தை ஏற்படுத்திய விதத்தைப் பரீட்சிப்பார். | 7.1 ரஷ்யப் புரட்சி உலக அரசியலில் செல்வாக்கு செலுத்திய விதத்தை விளக்குவார். | **7. ரஷ்யப் புரட்சி**<br>• புரட்சி அறிமுகம்<br>• புரட்சிக்கு வழிவகுத்த காரணிகள்<br>• புரட்சியின் விளைவுகள்<br>• சமூக வாதம்/ சோசலிசம் | • ரஷ்யப் புரட்சியை விளக்குவார்.<br>• புரட்சி மூலம் வெற்றி கொண்ட சமவுடைமைக் கொள்கையை தெளிவுபடுத்துவார்.<br>• சோசலிச வாதம் உலக அதிகார அணியாக உருவான விதத்தை எடுத்துக் காட்டுவார். | 15 |

# பாடத்திட்டம்

# தரம் 13

# க.பொ.த (உயர்தரம்) பாடத்திட்டம்
## இலங்கை வரலாறு

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| இலங்கை நாகரிகத்தின் வரலாற்று ரீதியான வளர்ச்சி போக்குகள் என்பன தொடர்பாக புரிந்துணர்வுடன் செயற்படுவார். | 7.1 இறுதி சுதேச இராசதானி பற்றி நுணுகியாய்வார். | **7. 16 ஆம் நூற்றாண்டு முதல் 18 ஆம் நூற்றாண்டு வரை இலங்கை**<br>7.1 கண்டி இராசதானி | • கண்டி இராசதானியின் ஆரம்பமும் வளர்ச்சியும் பற்றி விபரிப்பார்.<br>• கண்டி இராசதானியின் முக்கிய ஆட்சியாளர்களின் பெறுமதியை உணர்வார்.<br>• கண்டி இராசதானியின் வரலாற்று ரீதியான இடங்களை இலங்கைப் படமொன்றில் குறிப்பார். | 30 |
| | 7.2 கரையோரப் பிரதேசத்தில் போர்த்துக்கேயரதும், ஒல்லாந்தரதும் செயற்பாடுகளைத் தேடியறிவார். | கரையோரப் பிரதேசங்களில் போர்த்துக்கேயரதும் ஒல்லாந்தரதும் ஆட்சி | • கரையோரப் பிரதேசங்களைப் போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் கைப்பற்றிய விதத்தை விபரிப்பார்.<br>• கரையோரப் பிரதேசங்களில் போர்த்துக்கேயரதும் ஒல்லாந்தரதும் ஆட்சியை விபரிப்பார்.<br>• போர்த்துக்கேயரினதும் ஒல்லாந்தரினதும் கட்டுப்பாட்டின்கீழ் இருந்த பிரதேசங்களை இலங்கைப்படத்தில் குறித்துக்காட்டுவார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| இலங்கையில் வெளிநாட்டவரின் ஆதிக்கம் தொடர்பாகக் கற்றறிந்து தமது நாட்டின் இறைமையைப் பாதுகாத்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பார். | 8.1 பிரித்தானியரது ஆட்சி இலங்கையில் நிலைநாட்டப்பட்ட விதத்தைத் தெளிவுபடுத்துவார். | 8. **இலங்கையில் பிரித்தானியரது ஆட்சியதிகாரம் நிறுவப்படலும் நிலைநாட்டப்படலும்**<br>ஆட்சியதிகாரம் நிறுவப்படல்<br>• 1796 ஆம் ஆண்டு கரையோரப் பிரதேசங்கள் கைப்பற்றப்படல்<br>• 1815 ஆம் ஆண்டு கண்டி இராச்சியம் கைப்பற்றப்படல்<br>• 1818 ஆம் ஆண்டு சுதந்திரப் போராட்டம்<br>• 1833 கோல்புறூக் சீர்திருத்தம்<br>• 1848 சுதந்திரப் போராட்டம் | • பிரித்தானியரது ஆட்சி இலங்கையில் நிறுவப்பட்டமைக்கு ஏதுவாகிய காரணங்களைத் தெளிவுபடுத்துவார்.<br>• சுதேசிகளின் எதிர்ப்புக்களையும் அவற்றின் செயற்பாடுகளையும் பகுத்தாய்வார்.<br>• இறைமையைப் பாதுகாக்கத் தோள்கொடுத்த சுதேசத் தலைவர்களின் பெறுமதியை உணர்வார். | 30 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| வெளிநாட்டுப் பண்பாட்டுப் பிரவாகங்கள், சுதேச சமூகத்தில் இணைந்த விதம் பற்றிய புரிந்துணர்வுடன் செயற்படுவார். | 9.1 பிரித்தானியரது ஆட்சியின் கீழ் இலங்கைச் சமூகத்தில் இணைந்த புதிய அம்சங்களைத் தெளிவுபடுத்துவார். | **9. பிரித்தானியரின் கீழ் பொருளாதார, சமூக மாற்றங்கள் (1948 வரை)**<br>9.1 பொருளாதார, சமூக மாற்றங்கள்<br>• பெருந்தோட்டப் பொருளாதார வளர்ச்சி<br>• போக்குவரத்தும் தொடர்பாடலும்<br>• உள்நாட்டுக் கைத் தொழில்கள்<br>• கல்வி<br>• சமூக மாற்றங்கள் | • பிரித்தானியரின்கீழ் இந் நாட்டுப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாற்றங்களைத் தெளிவுபடுத்துவார்.<br>• பிரித்தானியரது பொருளாதாரத்திற்கு அமைய இந்நாட்டுச் சமூகத்தில் ஏற்பட்ட மாற்றத்தை எடுத்துக் காட்டுவார்.<br>• பிரித்தானியரது பொருளாதார நடவடிக்கைகளால் இந்நாட்டுப் பொருளாதாரத்திலும் சமூகத்திலும் ஏற்பட்ட சாதகமான மாற்றங்களை மதிப்பார்.<br>• பிரித்தானியரது பெருளாதாரச் செயற்பாடுகள் காரணமாக மங்கிய சுதேச தனித்துவம் பற்றி எடுத்துக் காட்டுவார். | 30 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 9.2 வெளிநாட்டுச் சக்திகளின் முன்னிலையில் தேசியத் தலைவர்கள் செயற்பட்ட விதத்தை எடுத்துக்காட்டுவார். | **9.2 சுதேச சமய, பண்பாட்டு எழுச்சி** | • உள்நாட்டு சமய, கலாசார எழுச்சியைத் தெளிவுபடுத்துவார்.<br>• நாட்டின் தனித்துவத்தைப் பாதுகாக்க தோள்கொடுத்த தலைவர்களை மதிப்பார்.<br>• வெளிநாட்டுச் சக்திகளின் முன்னிலையில் நாட்டின் தனித்துவத்தைப் பாதுகாப்பதற்காகச் செயற்படுதல் வேண்டும் என்பதை எடுத்துக்காட்டுவார். | |
| இலங்கையில் வெளிநாட்டு ஆதிக்கம் தொடர்பாகக் கற்றறிந்து தமது இறைமையைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பார். | 10.1 பிரித்தானியரின் ஆட்சி மற்றும் சுதேசசத் தலைவர்களின் செயற்பாடுகள் பற்றி நுணுகியாய்வார். | **10. அரசியல் சீர்திருத்தங்களும் தேசிய இயக்கமும்**<br>• 1910, 1920, 1924 அரசியல் அமைப்புச் சீர்திருத்தங்கள்<br>• டொனமூர் அரசியலமைப்பு<br>• சோல்பரி அரசியலமைப்பு<br>• சுதந்திரம் பெறல் | • பிரித்தானியரின் ஆட்சியின் கீழ் இடம்பெற்ற அரசியல் சீர்திருத்தங்களைத் தெளிவுபடுத்துவார்.<br>• அரசியல் சீர்திருத்தங்களின் பின்னர் இலங்கையின் தேசிய இயக்கத்தின் செயற்பாடுகளைத் தெளிவுபடுத்துவார்.<br>• வெளிநாட்டு ஆதிக்கத்தின் முன் உள்நாட்டுத் தலைவர்கள் செயற்பட்ட விதத்தினை எடுத்துக்காட்டுவார். | 30 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| இலங்கை நாகரிகத்தின் வரலாற்று ரீதியான வளர்ச்சி போக்குகள் என்பன தொடர்பாக விளக்கத்துடன் செயற்படுவார். | 11.1 இறைமையுள்ள ஓர் அரசுக்காக ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட அரசியல் யாப்புகளை நுணுகியாய்வார். | **11. சுதந்திரத்தின் பின் இலங்கை**<br>11.1 அரசியல் யாப்பின் வளர்ச்சி<br>- 1972, 1978 | • 1972, 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்புகளை விபரிப்பார்.<br>• 1972, 1978 ஆம் ஆண்டு யாப்புகளை விமர்சன ரீதியாக விளக்குவார். | 60 |
| | 11.2 இறைமையுள்ள ஓர் அரசாகத் தேசிய முன்னேற்றத்தின் பொருட்டு நடைமுறைப் படுத்திய கொள்கைகள் மற்றும் வேலைத்திட்டங்களை நுணுகியாய்வார். | 11.2 அபிவிருத்திச் செயற்பாடு<br>• பொருளாதார அபிவிருத்தி<br>- அரச முயற்சியாண்மைகள்<br>- விவசாயம்<br>- கைத்தொழில்கள்<br>• சமூக நலனோம்பல்<br>- கல்வி<br>- சுகாதாரம்<br>- பங்கீட்டு முறை<br>- தொடர்பாடல் | • சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் அபிவிருத்தி உத்திகளை விபரிப்பார்.<br>• சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் அபிவிருத்தி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளைப் பாராட்டுவார்.<br>• அபிவிருத்தி உத்திகளின் விளைதிறனைப் பகுத்தாய்வார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 11.3 இறைமையுள்ள ஓர் அரசு என்ற வகையில் வெளிநாட்டு அரசுகளுடன் செயற்பட்ட விதம் பற்றி ஆய்வு செய்வார். | **11.3 வெளிநாட்டுக் கொள்கை** | • சுதந்திர இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையைப் விளக்குவார்.<br>• இலங்கையானது வெளிநாட்டவரின் கவனத்தை ஈர்த்தமைக்கான காரணங்களைத் தெளிவுபடுத்துவார்.<br>• இலங்கையுடன் நட்புறவைப் பேணிய நாடுகளைத் உலகப் படத்தில் குறித்துக் காட்டுவார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| இந்திய வரலாற்றின் வரலாற்று ரீதியான வளர்ச்சிப் போக்குகள் தொடர்பாக விளக்கத்துடன் செயற்படுவார். | 9.1 இந்திய வரலாற்றில் வெளிநாட்டு அரசுகள் ஏற்படுத்திய தாக்கங்கள் தொடர்பான தகவல்களை பகுத்தாய்வார். | 9. **பிந்திய மௌரிய யுகமும் வெளிநாட்டு அரசியல் தாக்கமும்**<br>• சுங்க வம்சம்<br>• இந்தோ-கிரேக்க சாகர், பல்லவர் ஆட்சியும் அவர்களது பண்பாடும்<br>• குஷாண யுகமும் இந்திய வரலாற்றிற்கு அவர்களது பங்களிப்பும்<br>• சாதவாகன யுகமும் அவர்களது பண்பாடும் | • இந்திய வரலாற்றில் தாக்கம் செலுத்திய வெளிநாட்டு அரசுகள் தொடர்பான தகவல்களை விபரிப்பார்.<br>• வெளிநாட்டு அரசுகளின் தாக்கங்களை எடுத்துக் காட்டுவார்.<br>• மௌரியருக்குப் பிற்பட்ட காலத்தை தேசப்படத்தில் குறித்துக் காட்டுவார். | 30 |
| இந்திய வரலாற்று வளர்ச்சி போக்குகள் என்பன தொடர்பாக விளக்கத்துடன் செயற்படுவார். | 10.1 இந்திய வரலாறு கட்டியெழுப்பப்படுவதில் குப்த பேரரசின் பங்களிப்பை விளக்குவார். | 10. **குப்த பேரரசின் தோற்றம்**<br>• குப்த பேரரசின் பரம்பல்<br>• குப்த ஆட்சியாளர்களின் செயற்பாடும் இந்திய மானிட சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கங்களும்<br>• குப்தர் கால சமூக, பொருளாதார, பண்பாட்டு நடவடிக்கைகள்<br>• குப்த பேரரசின் வீழ்ச்சியும் ஹூணர்களின் ஆக்கிரமிப்பும் | • குப்த பேரரசின் தோற்றம் அதன் எழுச்சி, வீழ்ச்சி என்பவற்றை விபரிப்பார்.<br>• குப்தர்களின் அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டு நடவடிக்கைகள் இந்திய சமூகத்தில் தாக்கத்தை ஏற்படுத்திய விதத்தினைத் தெளிவுபடுத்துவார்.<br>• குப்த பேரரசின் பரவலை தேசப் படத்தில் குறிப்பார். | 30 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| இந்திய வரலாற்றின் வரலாற்று ரீதியான போக்குகள் வளர்ச்சி தொடர்பான விளக்கத்துடன் செயற்படுவார். | 11.0 குப்த பேரரசின் பின்னர் பிரதேச ஆட்சி அதிகாரம் வளர்ச்சியடைந்த விதத்தினை எடுத்துக் காட்டுவார். | **11. குப்த காலத்திற்குப் பின்னர் வட இந்தியாவின் அரசியல் போக்குகள்**<br>• பிரதேச அதிகாரம் மீண்டும் தோற்றம் பெறல்<br>- கன்னோசியின் அதிகார வளர்ச்சி<br>- ஹர்ஷவர்த்தன மன்னன்<br>• பிரதேச அரசியல் அலகுகளின் அதிகாரம் மீண்டும் நிறுவப்படல்<br>• பாலர், கூர்ஜர பிரதிகாரர், இராஷ்ரகூடர் ஆகியோரின் ஆட்சி அதிகாரமும் கன்னோசியும்<br>• பிரதேச அரசுகளின் கீழ் அப்பிரதேசங்களில் அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டு நடவடிக்கைகள் | • குப்தர் காலத்திற்குப் பிற்பட்ட காலத்தில் இருந்த வலிமை வாய்ந்த பிரதேச அரசுகள் தொடர்பான தகவல்களை முன்வைப்பார்.<br>• பிரதேச அரசுகள் இந்திய வரலாற்றில் ஏற்படுத்திய தாக்கத்தினை எடுத்துக் காட்டுவார்.<br>• குப்தர் காலத்திற்குப் பிற்பட்ட கால இந்தியாவை இந்தியத் தேசப்படத்தில் குறித்துக் காட்டுவார். | 35 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| இந்திய வரலாற்றின் வரலாற்று ரீதியான வளர்ச்சிப் போக்குகள் தொடர்பாக புரிந்துணர்வுடன் செயற்படுவார். | 12.1 முஸ்லீம்களின் ஆக்கிரமிப்புக்கு அடிப்படை அமைந்த விதத்தினை விபரிப்பார். | **12. அராபியர்களதும், துருக்கியர்களதும் ஆக்கிரமிப்பும் இந்திய அரசியல் நிலைமையும்**<br>• அராபிய, துருக்கிய ஆக்கிரமிப்பு<br>• சமகால இந்தியாவின் அரசியல் நிலை | • இந்தியா மீதான அராபிய - துருக்கிய ஆக்கிரமிப்புக்களை விபரிப்பார்.<br>• அராபிய - துருக்கிய ஆக்கிரமிப்புக்கள் இந்திய வரலாற்றில் தாக்கம் செலுத்திய விதத்தினை எடுத்துக் காட்டுவார்.<br>• அராபியரும், துருக்கியரும் கைப்பற்றிய பிரதேசங்களை இந்திய தேசப் படத்தில் குறித்துக்காட்டுவார். | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| இந்திய வரலாற்றின் வரலாற்று ரீதியான வளர்ச்சி போக்குகள் புரிந்துணர்வுடன் தொடர்பாக செயற்படுவார். | 13.1 தென்னிந்திய பிரதேச அரசுகள் இந்திய வரலாற்றில் தாக்கம் செலுத்திய விதத்தினைத் தெளிவுபடுத்துவார். | **13. தென்னிந்திய அரசியல் பின்னணி**<br>13.1 தென்னிந்திய அரசியல்<br>• அரசியல் செயற்பாடுகள் ஆரம்பமாதல்<br>• பல்லவ, பாண்டிய, சோழ, சாளுக்கிய ஆட்சியாளர்களின் கீழ் இந்தியாவின் புதிய போக்குகள்<br>• தென்னிந்திய சமூக, பொருளாதார, பண்பாட்டு இயல்புகளும் அவற்றின் வளர்ச்சியில் தாக்கம் செலுத்தியவைகளும் | • தென்னிந்தியாவின் எல்லைகளையும் பிரதேச அரசுகளையும் தேசப்படத்தில் குறிப்பார்.<br>• தென்னிந்திய அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டு நிலைமைகளைத் தெளிவுபடுத்துவார்.<br>• தென்னிந்தியாவின் போக்குகள் இந்திய வரலாற்றில் தாக்கம் செலுத்திய விதத்தினை விபரிப்பார். | 20 |
| | 13.2 தென்னிந்திய அரசியல் நிலைமை இலங்கை மீது தாக்கம் செலுத்திய விதத்தினை விளக்குவார். | **13.2 தென்னிந்தியாவும் இலங்கையும்**<br>• தென்னிந்தியாவின் தாக்கமும் இலங்கையும் | • இலங்கை மீது தென்னிந்தியா தாக்கம் செலுத்தியமைக்கான காரணங்களை எடுத்துக் கூறுவார்.<br>• இலங்கை மீது தாக்கம் செலுத்திய அரசுகளையும் அவற்றின் தாக்கங்களையும் விபரிப்பார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| பிரபல்யமான வரலாற்று நபர்களின் வீர செயற்பாடுகள் வரலாற்றைக் கட்டியெழுப்புவதில் பங்களிப்புச் செய்த விதத்தினைப் பரீட்சிப்பார். | 8.1 நெப்போலியனின் சீர் திருத்தங்கள் பிரான்சின் தேசியத்தைக் கட்டியெழுப்புவதில் பங்களிப்புச் செய்த விதத்தினைத் தெளிவுபடுத்துவார். | **8. நெப்போலியன் பொனபாட்டும் அவரது பேரரசும்**<br>• நெப்போலியன் பிரான்சில அதிகாரம் பெறல்<br>• நெப்போலியனின் சீர் திருத்தங்கள்<br>• நெப்போலியனின் வெளிநாட்டுக் கொள்கையும் பிரான்சின் அதிகாரப் பரம்பலும்<br>• நெப்போலியன் தோல்வி அடைந்தமைக்கான காரணங்கள் | • நெப்போலியன் வலிமை வாய்ந்த பேரரசைக் கட்டியெழுப்பிய விதத்தை விபரிப்பார்.<br>• பலம் வாய்ந்த பேரரசன் வீழ்ச்சியுறுவதற்கான காரணங்களை முன்வைப்பார்.<br>• நெப்போலியனது பேரரசை தேசப்படமொன்றில் அடையாளமிடுவார். | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| ஐரோப்பாவின் அதிகார சமநிலையைப் பாதுகாக்கும் பொருட்டு இனங்களுக்கிடையே ஒற்றுமை நிலவ வேண்டியதன் முக்கியத்துவத்தை விளக்குவார். | 9.1 ஐரோப்பாவில் சமாதானம் நிலவச் செய்வதில் வியன்னா மகா நாட்டின் பங்களிப்பினைப் பரீட்சிப்பார்.<br><br>9.2 பல்வேறு குழுக்கள் ஒன்றிணைந்து ஒற்றுமையுடன் செயற்படுவதன் முக்கியத்துவத்தை விளக்குவார். | **9. வியன்னா மகாநாடு**<br>9.1 வியன்னா மகாநாடு அறிமுகம்<br>• வியன்னா மகாநாட்டை கூட்டுவதற்கான காரணங்கள்<br>9.2 வியன்னா மகாநாடு பின்பற்றிய செயற்பாடுகள்<br>• வியன்னா மகாநாட்டின் விளைவுகள் | • ஐரோப்பாவின் சமாதானத்தைப் பாதுகாப்பதற்கு வியன்னா மகாநாடு மேற்கொண்ட நடவடிக்கைகளைத் தெளிவுபடுத்துவார்.<br>• சமாதானத்தைப் பாதுகாக்கும் பொருட்டு மகாநாட்டின் முக்கித்துவத்தினைத் தர்க்க ரீதியாகத் தெளிவுபடுத்துவார்.<br>• வியன்னா மகாநாட்டின் பின்னைய இருந்த ஐரோப்பாவை தேசப்படமொன்றில் குறிப்பார். | 15 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| நவீன உலகில் பல்வேறு அரசியல் சிந்தனைகள் நடைமுறையில் செயற்பட்ட விதத்தினைப் பரீட்சிப்பார். | 5.1 லிபரல் வாதத்தினதும் தேசிய வாதத்தினதும் வளர்ச்சியினைத் தெளிவுபடுத்துவார். | **5. லிபரல் வாதத்தினதும் தேசிய வாதத்தினதும் வளர்ச்சி**<br>• லிபரல் வாத, தேசிய வாத இயக்கங்களின் வளர்ச்சி<br>• 1848 புரட்சி<br>• சக்திகள்<br>• இத்தாலிய ஐக்கியம்<br>• ஜேர்மனிய ஐக்கியம் | • அரசியல் சிந்தனையின் வளர்ச்சியுடன் புரட்சிகரச் சக்திகள் வெளிப்பட்ட விதத்தினை விவரிப்பார்.<br>• லிபரல்வாத, தேசிய வாத அரசியல் சிந்தனைகள் நடைமுறையில் பயன்பட்ட விதத்தினை எடுத்துக் காட்டுவார்.<br>• இத்தாலி, ஜேர்மனி ஐக்கியப்பட்ட விதத்தை தேசப்படத்தின் மூலம் எடுத்துக்காட்டுவார். | 25 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| அதிகாரம் தொடர்பான மோதல்களினால் ஏற்படும் அழிவுகளை விளங்கிக் கொண்டு சமாதானம் நிலவச் செய்திட நடவடிக்கை எடுப்பார். | 11.1 முதலாம் உலக யுத்தம் தொடர்பான அழிவுகளை எடுத்துக்காட்டுவார். | **11. முதலாம் உலக யுத்தம்**<br>• போர் ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்திய வரலாற்றுப் பின்னணி<br>  • நவ குடியேற்றவாதம்<br>  • ஆபிரிக்காவிற்கான போட்டி<br>  • போல்கன் பிரச்சினை<br>  • ஐரோப்பா இரு அணிகளாகப் பிரிந்தமை<br>• போரின் முக்கிய கட்டங்கள்<br>• போரின் விளைவுகள்<br>  • வர்சேல்ஸ் ஒப்பந்தம்<br>  • ஐரோப்பிய தேசப்படம் உருமாறுதல்<br>• சர்வதேச சங்கம் உருவாதல் | • உலக யுத்தம் ஏற்பட்ட விதத்தை விளக்குவார்.<br>• உலகப் போரின் விளைவுகளை எடுத்துக் காட்டுவார்.<br>• உலகப் போருடன் தொடர்பான நகரங்களையும் நாடுகளையும் உலகப் புறவுருவப் படத்தில் குறித்துக் காட்டுவார். | 15 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| நவீன உலகில் பல்வேறு அரசியல் சிந்தனைகள் நடைமுறையில் செயற்பாட்டிற்கு வந்த விதத்தை பரீட்சிப்பார். | 12.1 ரஷ்யப் புரட்சி உலக சக்தியாக மாறிய விதத்தை விளக்குவார். | **12.ரஷ்யப் புரட்சி**<br>• ரஷ்யப் புரட்சி - அறிமுகம்<br>• புரட்சிக்கான காரணங்கள்<br>• புரட்சியின் விளைவுகள்<br>• சோசலிசம் | • ரஷ்யப் புரட்சியைத் தெளிவு படுத்துவார்.<br>• புரட்சியின் மூலம் வெற்றி கண்ட சோசலிசக் கொள்கையை விளக்குவார்.<br>• சமவுடைமைக் கொள்கையையும் அதன் பரவலையும் எடுத்துக் காட்டுவார். | 15 |
| அதிகாரத்திற்கான போராட்டங்களின் அழிவுகளை விளங்கிக் கொண்டு சமாதானத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்வார். | 13.1 இரண்டாம் உலக யுத்தத்தின் அழிவு நாசங்களை எடுத்துக் காட்டுவார்.<br><br>13.2 உலக சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு ஒற்றுமையுடன் செயற்படுவதன் முக்கியத்துவத்தை பரீட்சிப்பார். | **13.இரண்டாம் உலகப் போர்**<br>13.1 யுத்தம்<br>• போர் ஆரம்பம்<br>• போரின் பரம்பல்<br>• முடிவும் விளைவும்<br>13.2 ஐக்கிய நாடுகள் சபை<br>• நோக்கம்<br>• கட்டமைப்பு<br>• செயற்பாடுகள் | • இரண்டாம் உலக யுத்தம் ஏற்படுவதற்கான காரணங்களைத் தெளிவுபடுத்துவார்.<br>• இரண்டாம் உலக யுத்தத்தின் விளைவுகளை விளக்குவார்.<br>• ஐக்கிய நாடுகள் சபையின் நோக்கங்களை விபரிப்பார்.<br>• உலக சமாதானத்தைப் பாதுகாக்கும் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளைத் தெளிவுபடுத்துவார். | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| அதிகாரம் தொடர்பாக ஏற்படும் மோதல்கள் அழிவு நாசங்களை ஏற்படுத்தும் என்பதைப் புரிந்து கொண்டு சமாதானத்தைப் பாதுகாப்பதற்காக செயற்படுவர். | 14.1 பலம் வாய்ந்த அணிகள் உலக அரசியலில் ஏற்படுத்திய தாக்கத்தினைத் தெளிவுபடுத்துவார். | **14. இரண்டாம் உலகப் போரின் பின்னர் உலகம்**<br>14.1 வல்லரசு அணிகள்<br>• முதலாளித்துவம் - நேட்டோ<br>• சமவுடைமை -வோர்சோ வாதம்<br>• அணிசேரா வாத நாடுகள் | • தற்போதைய உலக அரசியல் நிலையில் தாக்கம் செலுத்திய காரணங்களை எடுத்துக் காட்டுவார்.<br>• அணிகளின் அரசியல், பொருளாதார, சமூக நிலைகளை விளக்குவார். | 25 |
| | 14.2 பனிப்போர் காலத்தில் பலம் வாய்ந்த அணிகளிடையே ஏற்பட்ட மோதல்களை விளக்குவார். | 14.2 பனிப்போர்<br>• கருத்து மோதல்கள்<br>• அணிகள் வீழ்ச்சியுற்றமை | • பனிப்போரைத் தெளிவுபடுத்துவார்.<br>• தமது அணியைப் பலப்படுத்துவதற்கு வல்லரசு அணிகள் செயற்பட்ட விதத்தினைத் தெளிவுபடுத்துவார்.<br>• உலக நாடுகள் அதிகார அணிகளின் கீழ் பிரிந்து சென்ற விதத்தை தெளிவுபடுத்துவார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| சிக்கலான நிலைமைகளினூடாக கட்டியெழுப்பப்படும் புதிய போக்குகள் தொடர்பான விளக்கத்துடன் செயற்படுவார். | 8.1 முதலாம் உலக யுத்தத்தின் பின்னர் தோன்றிய புதிய போக்குகளை நுணுகியாய்வார். | 8. உலக யுத்த இடைக்காலம்<br>• உலகப் பொருளாதார நெருக்கடி<br>• பாசிச, நாசிச வாத எழுச்சி<br>• யப்பானின் எழுச்சி<br>• சர்வதேச மன்றத்தின் தோல்வி | • உலக யுத்த இடைக்காலத்தினைத் தெளிவுபடுத்துவார்.<br>• பல்வேறு சிக்கலான நிலைமையின் வழியாக புதிய போக்குகள் தோற்றம் பெறும் விதத்தினை எடுத்துக் காட்டுவார்.<br>• சிக்கலான நிலைமைகளின் மூலம் தோற்றம் பெறும் புதிய போக்குகளின் தாக்கங்களை எடுத்துக் காட்டுவார். | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| அதிகாரம் தொடர்பாக ஏற்படும் முரண்பாடுகள் அழிவினை ஏற்படுத்தும் என்பதனை விளங்கி, சமாதானத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பார். | 9.1 இரண்டாம் உலக யுத்தத்தின் அழிவுகளை எடுத்துக்காட்டுவார். | 9. இரண்டாம் உலக யுத்தம்<br>9.1 யுத்தம்<br>• யுத்தத்தின் ஆரம்பம்<br>• யுத்தத்தின் பரவல்<br>• யுத்தத்தின் முடிவும் விளைவுகளும் | • இரண்டாம் உலகப் போரின் ஆரம்பத்தையும் பரவலையும் தெளிவுபடுத்துவார்.<br>• இரண்டாம் உலகப் போரின் விளைவுகளைப் பகுத்தாய்வார்.<br>• இரண்டாம் உலகப் போர் கால மற்றும் அதற்குப் பிற்பட்ட கால உலகை புறவுருவப்படமொன்றில் குறித்துக் காட்டுவார். | 35 |
| | 9.2 உலகில் சமாதானத்தை ஏற்படுத்தும் பொருட்டு சமாதானத்துடன் செயற்படுவதின் முக்கியத்துவத்தினைப் பரீட்சிப்பார். | 9.2 ஐக்கிய நாடுகள் சபை<br>• நோக்கம்<br>• கட்டமைப்பு<br>• தொழிற்பாடு | • ஐக்கிய நாடுகள் சபையின் நோக்கங்களைத் தெளிவுபடுத்துவார்.<br>• இரண்டாம் உலகப் போரின் பின்னர் உலகில் சமாதானத்தை ஏற்படுத்தும் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளைத் தெளிவுபடுத்துவார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| தேசிய சுயாதீனத்தின் பெறுமானத்தை விளங்கி, தேசிய தனித்துவத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பார். | 10.1 சுயாதீனத்தை வென்றெடுப்பதற்காக ஆசிய, ஆபிரிக்க நாடுகள் செயற்பட்ட விதத்தினை விசாரித்தறிவார். | 10. குடியேற்றவாதம்<br>• ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் தேசியப் போராட்ட இயக்கங்கள் | • ஆசியா, ஆபிரிக்காக் கண்டங்களிலுள்ள மேற்கு நாடுகளின் குடியேற்றங்களைத் தேசப் படத்தில் குறித்துக் காட்டுவார்.<br>• ஆசிய, ஆபிரிக்க நாடுகள் சுதந்திரம் பெற்றுக் கொள்ளும் பொருட்டு முன்னெடுத்த போராட்டங்களை விபரிப்பார்.<br>• சுயாதீனத்தை வென்றெடுப்பதற்கு தோள்கொடுத்த தலைவர்களை உயர்வாக மதிப்பார். | 40 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| தற்கால உலகப் போக்குகள் மற்றும் அவற்றின் தாக்கங்கள் தொடர்பான விளக்கத்துடன் செயற்படுவார். | 11.1 தற்கால உலகில் செயற்படும் அரசியல் சக்திகள் தொடர்பாகத் தெளிவுபடுத்துவார். | **11. உலகம் அதிகார முகாம்களாகப் பிளவுறல்**<br>- பனிப்போர்கள்<br>- அணிசேரா நாடுகள்<br>- சோவியத் நாட்டின் வீழ்ச்சி | • உலகம் அதிகார முகாம்களாகப் பிளவுற்ற விதத்தினைத் தெளிவுபடுத்துவார்.<br>• சோவியத் நாடு வீழச்சியுற்றதுடன் ஏற்பட்ட நிலைமைகளை விளக்குவார்.<br>• உலக அதிகார முகாம்களையும் அவற்றிற்குரிய நாடுகளையும் தேசப்படத்தில் குறித்துக் காட்டுவார். | 30 |
| பல்வேறு சவால்களின் முன்னிலையில் நாடுகள் முன்னேற்றமடைந்த விதத்தினை முன்னுதாரணமாகக் கொண்டு நாட்டின் முன்னேற்றத்தின் பொருட்டுச் செயற்படுவார். | 12.1 இருபதாம் நூற்றாண்டில் துரித வளர்ச்சியடைந்த ஆசிய நாடுகள் தொடர்பாகப் பகுத்தாய்வார். | **12. ஆசியாவின் எழுச்சி**<br>- சீனப் புரட்சியும் சீனாவின் எழுச்சியும்<br>- இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் யப்பானின் எழுச்சி | • சீனாவும் யப்பானும் உலகில் அபிவிருத்தி அடைந்த நாடுகள் என்ற நிலைக்கு வந்த விதத்தினை விபரிப்பார்.<br>• சீனா, யப்பான் ஆகிய நாடுகளிடமிருந்து பெறத்தக்க முன்மாதிரிகளை எடுத்துக் காட்டுவார். | 30 |

## (இ) பாடசாலைக் கொள்கைகளும் வேலைத்திட்டங்களும்

வரலாறு பாடப் பாடத்திட்டத்தில் அடங்கியுள்ள பாட விடயங்களை வெற்றிகரமாகவும் விளைதிறனுள்ளவாறும் கற்பதற்காகவும், அதன் மூலம் கற்றல் அனுபவங்களைப் பெறுவதற்காகவும் மாணவரது ஈடுபாடு அதிகரிக்கும் வகையில் பாடசாலை வேலைத்திட்டங்களைத் திட்டமிட்டுக் கொள்வது பெரிதும் பயனுடையதாகும்.

அவ்வாறான சில பாடசாலை வேலைத்திட்டங்கள் மாத்திரமே இங்கு முன்வைக்கப்பட்டுள்ளன. பொருத்தமான வேறு ஆக்கபூர்வமான வேலைத்திட்டங்களையும், கொள்கைகளையும் திட்டமிட்டுப் பயன்படுத்தும் சுதந்திரம் வரலாறு கற்பிக்கும் ஆசிரியருக்கு உண்டு என்பதைக் கவனத்தில்கொள்ளுங்கள்.

- ‘‘வரலாறு’’ சங்கமொன்று அமைப்பதன் மூலம் மாணவரது அறிவை விருத்தி செய்வதற்கான கலந்துரையாடல்கள், விவாதங்கள், கருத்தரங்குகள், கண்காட்சிகள் போன்றவற்றை ஒழுங்கு செய்து நடத்துவதற்கும் சஞ்சிகை, சுவரேடு போன்ற ஆக்கபூர்வமமான கருமங்களில் ஈடுபடுவதற்கும் வழிப்படுத்தலாம்.
- வருடத்தில் குறைந்த பட்சம் ஒரு தடவையேனும் முக்கியமான ஓர் இடத்துக்கு அல்லது பிரதேசத்துக்குக் கல்விச்சுற்றுலா செல்ல ஒழுங்குகளை செய்தல் வேண்டும். வகுப்பறையில் பெற்ற அறிவை உறுதிப்படுத்துவதற்காகவும், மேலும் விருத்தி செய்து செய்து கொள்வதற்காகவும் துணையாகுமாறு நேரகாலத்துடன் திட்டமிட்டு, கல்விச் சுற்றுலாக்களை ஒழுங்கு செய்தல் வேண்டும்.
- கருத்தரங்குகளை ஒழுங்கு செய்து நாட்டின் தலை சிறந்த வரலாற்றாசிரியர்களைப் பாடசாலைக்கு அழைத்து, அவர்களது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளச் சந்தர்ப்பமளித்தல்.
- பிரதேசத்தில் தொல்பொருளியல் முக்கியத்துவமுள்ள நினைவுச்சின்னங்கள் பற்றித் தேடியறிவதோடு அவற்றைப் பாதுகாப்பதற்காக பாடசாலை மட்ட மற்றும் சமுதாய மட்ட வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- வரலாற்றுப் பாட விடயங்களுடன் தொடர்புடைய ஓவியங்கள், சிற்பங்கள், செதுக்கல் வேலைப்பாடுகள், ஏனைய அரும்பொருள்களை அவதானிப்பதற்கும் அவதானிப்பு அறிக்கைகளைத் தயாரிப்பதற்குமாக அரும்பொருட்காட்சிச்சாலைகள் சார்ந்த வேலைத்திட்டங்களை ஒழுங்கு செய்தல்
- வரலாற்றுப் பாட விடயங்களுடன் தொடர்புடையதாக இணையத்தளங்கள் மூலம் தகவல்கள் திரட்டுதல்

## (ஈ) கணிப்பீடும் மதிப்பீடும்

கற்றல் - கற்பித்தற் செயன்முறையின் மூலம் எதிர்பார்க்கப்படும் கற்றற் பேறுகளை மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும், மாணவர் அடைந்துள்ள பாண்டித்திய மட்டத்தை இனங்காண்பதற்குமான வகுப்பறையில் இலகுவாக நடைமுறைப்படுத்தத்தக்க இடைத்தொடர்புகளைக் கொண்ட இரண்டு வேலைத்திட்டங்களாக கணிப்பீடு, மதிப்பீடு ஆகியவற்றைக் குறிப்பிடலாம். கணிப்பீடு சரியாக நிகழுமெனனின் வகுப்பில் கற்கும் மாணவர்கள் எதிர்பார்க்கும் தேர்ச்சிகளில் கிட்டிய பாண்டித்திய மட்டத்தை எட்டுவது ஒரு கடினமான காரியமாகாது. மாணவன் அடைந்துள்ள பாண்டித்திய மட்டம் யாது என்பதை இனங்காண்பதே மதிப்பீடு என்பதால் கருதப்படுகின்றது.

கணிப்பீட்டில் ஈடுபட்டிருக்கும் ஆசிரியர்கள் தமது மாணவர்கள் தொடர்பாக இரண்டு விதமான வழிகாட்டல்களை வழங்கலாம். அவ்வழிகாட்டல்கள், பொதுவாக பின்னூட்டல் (Feed Back) எனவும் முன்முகவூட்டல் (Feed Forward) எனவும் அழைக்கப்படும். மாணவரது நலிவுகளைக் கண்டறிந்தவிடத்து, அவர்களது கற்றல் சார்ந்த பிரச்சினைகளை நிவர்த்தி செய்து கொள்வதற்காகப் பின்னூட்டலையும் மாணவரது இயலுமைகளையும் வலிவுகளையும் இனங்கண்டவிடத்து அத்திறன்களை மேலும் விருத்தி செய்துகொள்வதற்காக முன்முகவூட்டலையும் வழங்குவது ஆசிரியரின் பணியாகும்.

கற்றல் - கற்பித்தல் செய்முறையின் வெற்றிக்காக, பாடத்தேர்ச்சிகளுள் எத்தேர்ச்சிகளை எந்தெந்த மட்டத்தில் அடைய முடிந்தது என்பதை மாணவர்கள் இனங்கண்டு கொள்வது அவசியமாகும். மதிப்பீட்டு வேலைத்திட்டத்தின் வழியே மாணவர்கள் அடைந்துள்ள பாண்டித்திய மட்டத்தைத் தீர்ப்புச் செய்வதே இங்கு ஆசிரியரிடம் எதிர்பார்க்கப்படுகிறது.

உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள இப்பாடத்திட்டம், மாணவர் மைய, தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட மற்றும் செயற்பாடுகள் சார்ந்த அணுகுமுறையை உள்ளடக்கியுள்ளது. செயற்பாட்டுக் கற்றலின்பால் (Active Learning) மாணவரை ஆசிரியர் வழிப்படுத்துதல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மாணவர்கள் செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கும் வேளைகளிலும் செயற்பாடுகளின் இறுதியிலும் கணிப்பீடு, மதிப்பீடு ஆகியவற்றை நடத்தலாம்.

கணிப்பீடு மற்றும் மதிப்பீட்டை இலகுவாக நடத்தத்தக்கவாறாக பொது நியமங்களைப் பயன்படுத்துவது பொருத்தமானது என விதந்துரைக்கப்பட்டுள்ளது. இந்த ஐந்து நியமங்களுள் முதல் மூன்று நியமங்களும் குறித்த தேர்ச்சியைக் கட்டியெழுப்புவதற்காக ஒருங்கு சேர்ந்துள்ள அறிவு, திறன் மனப்பாங்குகளை முதன்மையாகக் கொண்டு தயாரிக்கப்பட வேண்டும். மீதி இரண்டு நியமங்களையும் வாழ்க்கைக்குத் தேவையான திறன்களை வளர்த்துக் கொள்ளத்துணையாகும் வகையில் தயாரித்துக் கொள்ளல் வேண்டும். வகுப்பறையில் மாணவர்கள் செயற்படும் போது இந்நியமங்கள் தொடர்பான நடத்தை மாற்றங்களை இனங்காண ஆசிரியர் முயற்சி செய்தல் வேண்டும். கூடவே கணிப்பீட்டின் ஊடாக அந்நடத்தைகளை மேலும் வலுப்படுத்துவதிலும், மதிப்பீட்டின் ஊடாக அவற்றை அளந்தறிவதிலும் ஆசிரியர் கவனஞ் செலுத்துதல் வேண்டும். இவற்றோடு, வகுப்பறையில் எழுத்துச் சோதனைகள், செயற்றிட்டங்கள் போன்றவற்றிலும் மாத இறுதியிலும், தவணை இறுதியிலும், ஆண்டிறுதியிலும் நடத்தப்படும் பாடசாலை மட்ட, வலய மட்டப் பரீட்சைகளிலும் மாணவரை ஈடுபடுத்தலாம்.

## பாடத்திட்டம் தயாரிப்புக்குழு

**எழுத்தாளர் குழு - உள்வாரி**

| | | |
|---|---|---|
| டீ.எச்.சந்திமா நிஷானி தர்மபால | - | சிரேஷ்ட விரிவுரையாளர், சமூக விஞ்ஞானத்துறை - தேசிய கல்வி நிறுவகம் |
| டபிள்யூ.எஸ்.எஸ். குணவர்த்தன | - | உதவி விரிவுரையாளர், சமூக விஞ்ஞானத்துறை - தேசிய கல்வி நிறுவகம் |

**எழுத்தாளர் குழு (வெளிவாரி)**

| | | |
|---|---|---|
| பேராசிரியர் ஹகுரன்தெ திரானந்த தேரர் | - | பேராதெனியப் பல்கலைக்கழகம் |
| பேராசிரியர் மாலனி எதகம | - | ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம் (தகைசார் பேராசிரியர்) |
| பேராசிரியர். இந்திராணி முணசிங்க | - | கொழும்புப் பல்கலைக்கழகம் (தகைசார் பேராசிரியர்) |
| பேராசிரியர் யூ. பீ. கருணானந்த | - | களனிப் பல்கலைக்கழகம் (தகைசார் பேராசிரியர்) |
| பேராசிரியர் கே.எம்.பீ. குலசேக்கர | - | களினிப் பல்கலைக்கழகம் |
| பேராசிரியர் எம். சோமதிலக | - | பேராதெனியப் பல்கலைக்கழகம் |
| பேராசிரியர் பத்மசிரி கன்னன்கர | - | ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழம் |
| கலாநிதி நிர்மால் ரஞ்சின் தேவசிரி | - | கொழும்புப் பல்கலைக்கழகம் |
| கலாநிதி ரோஹித தசநாயக | - | பேராதெனியப் பல்கலைக்கழம் |
| கலாநிதி அனுத்தரா தேவி வித்தியாலங்கார | - | கொழும்புப் பல்கலைக்கழகம் |
| கலாநிதி சஞ்சீவி மந்திரத்ன | - | ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம் |
| ஆர். எம். சத்தியகுமார் | - | விரிவுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழம் |
| ஆர்.டப்.எஸ். தெல எதிரிவீர | - | ஆசிரிய சேவை I (ஓய்வு பெற்ற) |
| டப்.டீ.கே.டீ. பிடிகல | - | உப அதிபர் சேவை (ஓய்வு பெற்ற) |
| நந்தா மனம்பேரி | - | ஆசிரிய சேவை I (ஓய்வு பெற்ற) |
| ஏ. இந்திராணி | - | ஆசிரிய சேவை |
| எச்.எம். நளின்பண்டார | - | ஆசிரிய சேவை II (ஓய்வு பெற்ற) |
| ஜீவன சுரங்க கமகே | - | ஆசிரிய சேவை II |
| எம்.எச்.எம். யாகூத் | - | பிரதான செயற்றிட்ட அதிகாரி (ஓய்வு பெற்ற) |
| அருட் சகோதரி மேரி டொனேட்டா | - | உப அதிபர் சேவை (ஓய்வு நிலை) |